விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampuri

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | தை 09 ஞாயிற்றுக்கிழமை (22..01.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 34

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளுக்கு சொல்ஹெய்மின் வருகையுடன் தீர்வு

## பேச்சிற்கான இடமும் இவ்வாரம் தெரியுமாம்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் மீது இராணுத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைச் சம்பவங்களுக்கு தீர்வுகாண்பதற்கு ஜனாதிபதி தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இது குறித்து எரிக்சொல்ஹெய்ம் ஊடாக தனது முடிபை விடுதலைப் புலிகளிடம் தெரிவிப்பார் எனவும் அது குறித்த உத்தரவு இராணுவத்தினருக்கு அறிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டது. பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான இடம் குறித்தும் ஜனாதிபதி தனது இறுதி முடிபை அறிவிப்பார் எனவும் கூறப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக் கொலை...

### துன்னாலையில்

துன்னாலை மேற்கு தாமரைக்குளத்தடியில் வயோதிபர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்றிரவு 10 மணியளவில் அவரது வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாதோர் அவரை வெளியே அழைத்து சரமாரியாகச் சுட்டு விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

கிளிநொச்சியில் தொழிநுட்ப உத்தியோகத்தராகப் பணிபுரியும் இளையதம்பி இராதாகிருஷ்ணன் (வயது 61) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். (12 ஆம் பக்கம் பார்க்க)

### புளியங்கூடலில்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புளியங்கூடலில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த வர்த்தகரான துரைராஜா ரவிச்சந்தி ரன் (வயது 34) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் அவர் வீட்டில் இருந்த சமயம், வீட்டினுள் புகுந்த சிலர் அவரின் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் நேற்று காலை ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டு மரணவிசாரணைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சுட்டுக் கொல்லப்பட்டவர் விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-39-4)

### புத்தூர்ச் சந்தியில்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் ஏ 9வீதிக்கு அருகாமையில் உள்ள புத்தூர்ச் சந்தியில் நேற்று இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

புத்தூர்ச் சந்தியில் வர்த்தக நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் இந்திரன் (வயது 40) என்பவரே கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

போக்குவரத்து சேவை ஒன்றை நடாத்தி வந்த இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சம் காரணமாக வன்னிப்பகுதியை நோக்கி செல்லும் பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவையினை நடாத்திவருபவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### சேருநுவரவில்

(திருகோணமலை)

திருகோணமலை சேருநுவரவில் ஊர்காவற் படைச்சிப்பாய் ஒருவரும் ஓட்டோ சாரதி ஒருவரும் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

ஓட்டோவில் மாவிலாறுப் பகுதியை நோக்கி இருவரும் சென்று கொண்டிருந்தபோது நேற்றுக்காலை 8.30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஊர்காவற் படைச்சிப்பாயான நிசாந்த மடுகல்ல (வயது 26) மற்றும் ஓட்டோ சாரதி மகிந்த நவரட்ண (வயது 34) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (ச-4)

## வடக்கு கிழக்கு ஆளுநராக முஹான் ஜெயவிக்கிரம நியமனம்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக கடற்படையின் முன்னாள் பிரதம அதிகாரி ரியல் அட்மிரல் முஹான் ஜெயவிக்கிரம ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நியமனக்கடிதத்தை நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த, முஹான் ஜெயவிக்கிரவிடம் கையளித்தார். இதேவேளை இதுவரை காலமும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராக கடமையாற்றி வந்த டிரோன் பெர்னாண்டோ ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அடம்பன் பகுதிக்குள் ஊடுருவிய இராணுவத்தினர் மீது தாக்குதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான அடம்பன் பிரதேசத்திற்குள் ஊடுருவித்தாக்குதல் நடத்தும் 7படை வீரர்கள் உள் நுழைந்தனர்.

இவர்களுக்கு எதிராக பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தொண்டர் படையினரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத்தாக்குதல் காரணமாக அவ் ஏழு படைத்தரப்பினரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசத்தைவிட்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு இடம் பெயர்ந்தோருக்கு உதவ வெளிநாட்டு தமிழர்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான மனிதாபிமானப் பணிக்கு உலகத்தமிழருக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் வடக்கு கிழக்குப்பிரதேசங்களில் கடந்த மார்கழி 2005 முற்பகுதியில் வன்செயல்கள்அதிகரித்துக் காணப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பெரும் பகுதியான மக்கள் அங்கு நடைபெறும் வன்செயல்களினால் தங்கள் உயிருக்கு பேராபத்து ஏற்படலாம் என்று உணர்ந்து வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இத்தகைய வன்செயல்களை இராணுவமும் அதன் கூட்டாகச்செயற்படும் ஆயுதக்குழுக்களுமே மேற்கொள்வதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் முறையிட்டுள்ளது. இடம் பெயரும் மக்கள் தங்களுக்கு வன்னிப்பெருநிலமே பாதுகாப்பு என நினைத்து தொடர்ந்தும் இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றன.

3325 குடும்பங்கள் (16.01.2006 வரை சுமார் 14500 தனி நபர்களாக) தங்கள் நிரந்தரக்குடியிருப்புக்களை விட்டு கையில் எடுத்துச்செல்லக்கூடிய சில பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு தடைமுகாம்களையும் நீரேரிகளையும் கடந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசமான வன்னிப்பகுதிக்கு வந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் ஞானதரனுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

மாமனிதர் ஞானதரனுக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று மாலை 4.30 மணியளவில் நடை பெற்றது.

கிளிநொச்சியில் உள்ள பண்பாட்டு மண்டபத்தில் தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் பிரதம ஆசிரியர் சி.கருணாகரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

முதன்மைச் சுடரினை போராளி தமிழ்க்கவி ஏற்றிவைக்க, மாமனிதர் ஞானதரனின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் அ.பசுபதிப்பிள்ளை ஏற்றிவைத்தார். மலர் மாலையினை செஞ்சோலைப் பொறுப்பாளர் சுடர்மகள் ஏற்றி வைத்தார்.

நினைவுரைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தமிழீழ கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன், நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன், படைப்பாளர் ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் போராளிகள் படைப்பாளர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-4)

## நுணாவிலில் கிரனைட் வீச்சு இராணுவச் சிப்பாய் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இவர் பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏ-9 வீதியூடாக 52 ஆவது படையணி படைத்தரப்பினருக்கு குடிநீர் எடுத்து வருவதற்காக பவுசருடன் முகாமை விட்டு வெளியே (12ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.



எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# அன்பும் அமைதியும் இருக்கும் இடத்தில் இறைவனின் ஆசீர்வாதமும் இருக்கும்

## பரமபிதாகாட்டிய பாதை

மனிதனுக்கு தீங்கு விளைவிப்பவைகளை மனிதன் காணநேர்ந்தால் அல்லது தீங்கு விளைவிக்கும் என அறிந்தாலே அவற்றை அழித்து விடத் தயங்குதில்லை. இது நியதி



யான ஒன்றே. ஆனால் பலர் தமக்கும், தமது கொள்கைகளுக்கும் எதிரியாகவேறு யாரும் வந்து விடுவார்கள் என்று அஞ்சி அவர்களை அழித்துவிடவும் கங்கணம் கட்டி எதிரான செயற்பாடுகளைச் செய்வதையும் நாம் காண்கின்றோம். இவ்வாறே இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பிலும் அவரை வணங்க வந்த கீழ்த்திசை ஞானிகள் யூதேயா நாட்டு அரசனான ஏரோதிடம் சென்று யூதரின் அரசன் பிறந்துள்ளார் எங்கே? அவரை வணங்க வந்தோம் என்று, ஏரோது அரசனைக் கேட்ட பொழுது அவன் கலங்கினான். ஆத்திரம் அடைந்தான். ஆனாலும், தந்திரச் செயலில் ஈடுபட்டான். அந்தப் பிறந்துள்ள அரசனை நானும் வணங்க வேண்டும் நீங்கள் சென்று பார்த்து வாருங்கள் என்று குள்ளத் தந்திரம் உள்ளவனாக ஞானிகளை அனுப்பிவிட்டான்.

### விலை மதிக்க முடியாத உயிர்கள்

இன்றைய நாட்களிலும் ஒருவர் ஒருவரில் நம்பிக்கையற்றவர்களாக ஒன்றுமறியாத அப்பாவி மக்களின் விலை மதிக்க முடியாத உயிர்களை காவுகொள்ளும் செயல்கள் நடக்கின்றன.மானிடம் நேயம் அற்று மதிப்புக்குரிய 'உயிர்கள்' அழிக்கப்படுகின்றன. அன்று ஏரோத அரசன் மாசில்லாக் குழந்தைகளைக் கொன்றொழிக்க கட்டளை யிட்டான். காரணம் பிறந்துள்ள யூதரின் அரசனைக் கொல்ல வேண்டும் என்ற நோக்கத்திலே. ஆனால் யூதரின் அரசனாகப் பிறந்த இயேசு இறைவனால் வேறு நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டுகாப்பாற்றப்பட்டார். ஆனால் இங்கே மாசில்லாக் குழந்தைகள் வாழுக்கு இரையாகி மடிந்தனர். நீதி எங்கே? நியாயம் எங்கே?ஒன்றும் அறியா தவர் மரணிப்பதும் குற்றம் செய்யாத வன் தண்டிக்கப்படுவதும், கொடூரத் தன்மைகள் நிறைந்து அநீதியும் அக்கிரமும் தலைதூக்குவதும் இறை கோபத்தை ஏற்படுத்தும் இயற்கை அழிவுகள் எல்லாம் இறை கோபத்தின் அடையாளங்களே ஒன்றும் அறியாதவர்களும் ஒன்றும் அறியாமலே எடுத்துக் கொள்ளப்படுகின்றார்கள். இவ்வுலகின் இன்னல்களை அனுபவிப்பதை விட மறுவுலகில் அவர் களுக்கு பேரின்ப வீடு கிடைக்கும். இதுவும் இறைவனின் செயலாகவே அமைகின்றது.

பாவி களோடு நீதிமான்களும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்பட்டாலும் நீதிமான்கள், மாசில்லாதவர்கள் நித்திய மகிமைக்காக எடுக்கப்படுகின்றார்கள்.

### தீமையை விலக்கி நன்மைக்குத் திரும்புவோம்

நாம் குற்றம் செய்யாதவர்கள் மேல்அபாண்டம் கூறுவதும், கண்ணால் காணாதவைகளை நியாயப்படுத்துவதும், பொய் குற்றம் சுமத்துவதும், போலியாக நடித்துக் கொள்வதும் இறைவனுக்கு விருப்பமில்லாத நடவடிக்கைகள் ஆகும். நாம் ஆண்டவர் ஆகவோ, தீர்ப்பு வழங்கவோ முடியாது. வல்லமை யுள்ள இறைவனின் அதிகாரங் களை நாம் பறித்து எடுத்தால் இத னாலே சமுதாய அழிவுகளே இடம் பெறுகின்றன.

அன்பு, அமைதி குடி கொள்ள வேண்டிய இல்லங்கள் எல்லாம் அராஜக கூடங்களாக ஆக்கிரமிக்கின்றது.

சின்னத்திரையின் காட்சிகள் வக்கிரசிந்தையும், வன்முறைக் கலாசாரங்களையும் வளர்த்து இல்லங்களில் இருள் படர்ந்த வாழ்க்கையே நடைபெறு கின்றது. திருக்குடும்பத்தின் திருக் கோயில்களாக விளங்காமல் மாறிக் கொண்டு இருக்கின்றன.

**அன்ரனி பீற்றர்**

செபமாலை ஓதிய இல்லங்கள் சேர்ந்து ரீ.வி பார்க்கும் நிலைகள் மாற்றப்பட்டு, மீண்டும் செபமாலை ஒலிகள் எங்கும் முழங்கி இறை ஆசீர்வாதம் இறங்க மனமாற்றம் பெற்று புது வாழ்வு வாழுவோம். □

## சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் ஆலய நிர்வாகத்தால் நடாத்தப்பட்ட ஆங்கில வகுப்புகளில் கலந்து கொண்ட மாணவர்க ளுக்கு (IEMS) சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக பேராசிரியர் கலாநிதி வ. ஆறுமுகம் கலந்து கொள்கிறார். (க)

## பெயர் விபரங்களை பதியுமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

1990-1991 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வளைகுடாவில் ஏற்பட்ட யுத்தத்தினால், குவைத்திலிருந்து திரும்பியவர்களுக்கான நஷ்ட ஈட்டை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது பிரதேச செயலகத்தின் ஊடாக தமது பெயர், விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு இலங்கை வெளிநாட்டுவேலை வாய்ப்புப் பணியகம் கேட்டுள்ளது. (க-108)

# விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## -விமல் வீரவன்ஸ

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வுகளை நிராகரித்து வரும் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ வலியுறுத்தியுள்ளார். கொழும்பில் அண்மையில் ஊடகவியலாளர்களிடம் அவர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக்கட்சி முன் வைத்த கூட்டாட்சி அமைப்பு முறையிலான தீர்வை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டனர். அதே போல் மஹிந்த ராஜபக்ஷ முன் வைத்த ஒற்றையாட்சியின் கீழான கோரிக்கையையும் நிராகரித்துள்ளனர். தமிழீழத் தனிநாட்டை உருவாக்குவதில் தான் அவர்கள் உறுதியாக உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இல்லை. விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை அரசாங்கம் கண்டிப்பாக உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழீழத்துக்குக் குறைவான எந்தவொரு தீர்வையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது சபாநாயகர் தனது அதிகாரத்தைச் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கருணா குழுவினருடன் அரசாங்கம் இணைந்து செயற்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் அரசு சர்வதேச சமூகத்துக்கு தவறான தோற்றப்பாட்டை உருவாக்க முய லுகின்றனர்.

விடுதலைப்புலிகளின் பயங்கரவாதம் இப்போது பாராளுமன்றத்துக்குள்ளும் அவர்களது நிழல் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மூலம் உள் நுழைந்துள்ளது. இதைத் தடுக்க சரியான நடவடிக்கையை சபாநாயகர் எடுக்க வேண்டும் என்றார். (து)

# இராசி பலன்

**22.01.2006**
**(தை 9, ஞாயிற்றுக்கிழமை)**
**அட்டமி பின்னிரவு 5.05 மணிவரை**
**சித்திரை பிற்பகல் 1.42 மணிவரை**
**இராகுகாலம் 5.05-6.35 மணிவரை**
**சுபநேரம் 9.35-11.05 மணிவரை**
**அட்டமி, நவமி**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், தெய்வசிந்தை, நல்ல வரவேற்பு, ஆரோக்கியம். |
| இடபம் | உடல்நலம், தடைப்பட்ட காரியம் கைகூடும், புரிந்துணர்வு, நல்லசெய்தி. |
| மிதுனம் | குடும்ப சுகம், பூர்வ புண்ணிய கருமம், பணக் குறைவு, காரிய தாமதம். |
| கடகம் | மனச்சோர்வு, முயற்சி தாமதம், நண்பர்கள் சந்திப்பு, சிந்தனை மிகுதி. |
| சிங்கம் | கூட்டுமுயற்சி, அன்னியர் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, தெய்வசிந்தை. |
| கன்னி | செல்வாக்கு, பணவிரயம், வேலைச்சுமை, காரிய தாமதம். |
| துலாம் | நல்ல முயற்சி, புதிய தகவல், போசனசுகம், ஆழ்ந்த சிந்தை. |
| விருச்சிகம் | பிரயாணம், சுபசெலவு, மாதர் நட்பு, நண்பர்கள் உதவி. |
| தனுசு | எடுதத காரியம் கைகூடும், கீர்த்தி, உறவினர் சந்திப்பு, பொருள்சேர்க்கை. |
| மகரம் | உஷ்ண நிலை, கடினமுயற்சி, மேன்மை, நல்ல செய்தி. |
| கும்பம் | தந்தை வழி உறவு, கட்டுப்பாடு, வீண் பேச்சு, காரியதாமதம். |
| மீனம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், வாகன பயம், போசன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# பாதுகாப்பு கவுன்ஸிலில் — தமிழ் பிரதிநிதிகளையும் இணைக்குக

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி கோரிக்கை

அநாவசியமான கைதிகளை தவிர்த்துக்கொள்வதற்காக பாதுகாப்பு கவுன்ஸிலில் தமிழ் பிரதிநிதிகளை இணைத்துக்கொள்ள வேண்டுமென்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பிலுள்ள போதும் ஜனாதிபதிக்கு தெரியாமலே பாதுகாப்புத் துறையினர் தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக அரசாங்கத்திடம் இணைந்து செயற்படுகின்ற இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணிக்கு பெரும் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நாட்டில் மேலும் பல விளைவுகளுக்கு வழிகோலாமல் சமாதானச் சூழலை ஏற்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதியிடம் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (து-9)

# கிராம சேவையாளர்கள் இடமாற்றம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 10 கிராம சேவையாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திலிருந்து எஸ்.சச்சிதானந்தம் வீ.சிவசுப்பிரமணியம், நல்லூர் பிரதேசத்திலிருந்து ந.தவயோகன், வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து ம.அம்பிகைபாகன், கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து நா.மதனசேகர் ஆகியோர் கடந்த 16ஆம் திகதி தொடக்கமும் நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து த.தஜிதரன், தெல்லிப்பளை பிரதேச செயலகத்திலிருந்து இ.இந்திரசித்து, பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து மு.கந்தசாமி, பொ.தயாந்தி, அ.உமாசங்கர் ஆகியோர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் பெற்றுள்ளனர்.

சுனாமி அனர்த்தங்களின் போது யாழ்.மாவட்டத்திலிருந்து மருதங்கேணிக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்ட ஐந்து கிராம அலுவலர்களும் மீண்டும் தமது சொந்த இடங்களில் கடந்த 16ஆம் திகதி முதல் கடமையை பொறுப்பேற்றனர். (து-35)

# தீவுப் பகுதியில் பதற்ற நிலை கஜேந்திரன் எம்.பி கடிதம்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் ஆயுதங்களுடன் நடமாடும் ஈபிடிபியினர் பொது மக்கள் மீது கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதாக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

சட்டத்திற்கு முரணான வகையில் ஈபிடிபியினர் செயற்பட்டுவருவதாகவும், அதற்கு பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் கஜேந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருவார காலமாக வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

தமது சொந்த வீடுகளிலிருந்து இடம்பெயரக் கூடிய வகையில் மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களைக் கருத்திற்கொண்டு, ஈபிடிபியினரிடம் இருக்கும் ஆயுதங்களைக் களைந்து நிம்மதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக்கும்படி கஜேந்திரன் எம்.பி கடிதம் மூலம் கோரியுள்ளார். (ச-4)

# தீவக மக்கள் இடம்பெயர்வு

(ஊர்காவற்றுறை)

அடிக்கடி நடைபெறும் வன்செயல்கள், கொலைகள், ஆட்கள் கடத்தல் ஆகியவற்றால் தீவகக் குடும்பங்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

கடந்த வாரம் பருத்தியடைப்பு, முகாம் வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்த பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (து-72)

# ஹங்கேரியில் விமான விபத்து 42 அமைதிப் படைவீரர்கள் பலி

சுலோவாக்கிய நாட்டு இராணுவ விமானம் ஒன்று ஹங்கேரி நாட்டில் விழுந்து நொறுங்கி தீப்பிடித்ததில் அதில் பயணம் செய்த சுலோவாக்கிய நாட்டு அமைதிப்படை வீரர்கள் 42 பேர் பலியானார்கள்.

சுலோவாக்கிய நாட்டைச் சேர்ந்த 43 அமைதிப்படை வீரர்கள் விமானம் ஒன்றில் கொசாவா என்ற இடத்திலிருந்து சுலோவாக்கியாவுக்குச் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஹங்கேரி நாட்டில் சுலோவாக்கிய நாட்டு எல்லையில் திடீர் என்று அந்த விமானம் நிலை தடுமாறி கீழே விழுந்து வெடித்துச் சிதறியது. விமானம் தீப்பிடித்து வெடித்துச் சிதறியதால் அந்த விமானத்தில் பயணம் செய்த 43 பேரில் 42 பேர் உடல் கருகி பலியானார்கள். ஒருவர் மட்டும் உயிர் தப்பினார்.

விபத்து நடந்த இடத்தில் கருகிய உடல்கள் அடையாளம் தெரியாத் அளவுக்கு சிதறிக்கிடந்தன. உடல் உறுப்புகள் சிதறுண்டு காணப்பட்டன. இதனால் எத்தனை பேர் இறந்தனர் என்பது முதலில் கணக்கிடப்பட முடியாத நிலையில் இருந்தது. அதன்பிறகு அந்த விமானத்தில் பயணம் செய்தவர்கள் 43பேர் தான் என்று சுலோவாக்கிய அதிகாரிகள் பட்டியல் தந்தனர்.

இதனையடுத்து இறந்தவர்களின் எண்ணிக்கை 42 தான் என்றும், ஒருவர் மட்டும் உயிர்பிழைத்தார் என்றும் ஹங்கேரி நாட்டு உள்துறை அதிகாரிகள் உறுதி செய்தனர்.

சுலோவாக்கிய இராணுவத்தினர் வந்து பலியானவர்களின் உடல்களையும், உடல் பாகங்களையும் பெற்றுச் சென்றார். உடல்கள் உருக்குலைந்து போனதால் அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (g)

# நேபாளத்தில் ஊரடங்கு உத்தரவு 6 அரசியல் தலைவர்கள் கைது

(காத்மண்டு)

நேபாளத்தில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் 6பேரை அந்நாட்டு அரசு கைது செய்துள்ளது.

நேபாளத்தில் நடைபெற்றுவரும் மன்னராட்சிக்கு எதிராக புதிய ஜனநாயகக் கட்சியை கொண்டு வருவதற்காக அங்கு ஏழு கட்சிக் கூட்டணி என்ற பெயரில் அரசியல் தலைவர்கள் பலர் அடிக்கடி போராட்டங்களிலும், பேரணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மன்னராட்சிக்கு எதிராக அடிக்கடி போராட்டங்களில் ஈடுபட்டு வரும் ஏழு கட்சிக் கூட்டணியின் முயற்சிகளை முறியடிக்கும் விதமாக நேற்றுமுன்தினம் அதிகாலை 8 மணியிலிருந்து நேபாளம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது.

குறிப்பாக தலைநகர் காத்மண்டுவில் மன்னராட்சிக்கு எதிராக நடைபெறவிருந்த மிகப்பெரிய பேரணியை தடுக்கும் விதமாக ஆயிரக்கணக்கான படைவீரர்கள் முக்கிய தெருக்கள் முழுவதிலும் ரோந்துப் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இருப்பினும் ஊரடங்கு சட்டம் அமுலுக்கு வந்த அடுத்த ஒரு மணிநேரம் கழித்து, நேபாள சாத்பாவனா கட்சியின் தலைவர் ராஜேந்திர மஹாத்தோ மற்றும் அதே கட்சியின் மத்திய உறுப்பினர் அனில் குமார் ஷா ஆகியோர் மன்னராட்சிக்கு எதிராக கோஷங்களை எழுப்பி எதிர்ப்புத் தெரிவித்தபடி போராட்டங்களிலும், பேரணியிலும் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படாத பாலிஜி மற்றும் காத்மண்டு நகரத்தின் ரிங்ரோட்டுக்கு வெளிப்புறத்தே உள்ள மற்ற இடங்களிலும் அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதனால் மன்னராட்சியை எதிர்த்தும், ஊரடங்கு உத்தரவு சட்டத்தை மீறியும் போராட்டத்தில் ஈடுபட்ட 6 அரசியல் கட்சி தலைவர்களை நேற்று முன்தினம் அந்நாட்டு அரசு கைது செய்தது.

இது தவிர்த்து மனித உரிமை சமூக ஆர்வலர்கள் மற்றும் நகர சமூகத் தொண்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோரையும் நேபாள அரசு கைதுசெய்திருப்பதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (g)

# புளூட்டோவுக்கு விண்கலத்தை ஏவியது நாஸா

சூரிய மண்டலத்தின் கடைக்கோடியில் உள்ள கோளான புளூட்டோவுக்கு நியூ ஹொரைசன்ஸ் விண்கலத்தை அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா கடந்த வியாழக்கிழமை ஏவியது.

இந்த விண்கலத்தை அட்லஸ் வி-551 ஏவுகணை சுமந்து சென்றது. புளோரிடா வில் இருந்து வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஏவுகணை புறப்பட்டது. வானிலை மாற்றம், மின்தடை காரணமாக இரு தினங்களாக இந்த விண்கலம் ஏவுவது தாமதம் அடைந்து வந்தது. புளூட்டோ கோளை அடைய இந்த விணகலம் 10 ஆண்டுகள் பயணம் செய்யவேண்டி வரும். பயணம் செய்ய வேண்டிய தொலைவு 490 கோடி கி.மீ. அட்லஸ் ஏவுகணை விண்ணில் பறந்த 42 நிமிடத்தில் அதிலிருந்து விண்கலம் பிரிந்துவிடும். அதன் பிறகு விண்கலத்தின் வேகம் மணிக்கு 58ஆயிரம் கி.மீ. வரை இருக்கும்.

பயணம் தொடங்கிய 9மணி நேரத்தில் நிலவை விண்கலம் தாண்டிவிடும். ஆனால் நிலவு அருகே செல்ல அப்போலோ விண்கலம் 3 தினங்களை எடுத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

காரின் அளவு கொண்ட நியூ ஹொரைசன்ஸ் விண்கலத்தின் எடை 480 கிலோ. இது புளூட்டோவை நெருங்கியதும் அது பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். அங்கிருந்து அது அனுப்பும் வானொலி வடிவ தகவல்கள் பூமியை வந்துசேர 4 மணி 25 நிமிடங்கள் பிடிக்கும்.

பல்வேறு கருவிகள் இதில் உள்ளன. புளூட்டோவின் மேற்பரப்பு அதன் நிலவு போன்றவற்றை விண்கலம் புகைப்படம் பிடித்து அனுப்பி வைக்கும். (g)

# இந்திய பேராசிரியருக்கு விருது

(ஹூஸ்டன்)

நியூட்ரான் நட்சத்திரங்களைப் பற்றி ஆய்வுசெய்து வரும் அமெரிக்க வாழ் இந்தியப் பேராசிரியர் தீப்தா சக்கரவர்த்திக்கு புரூனே ரோசாய் என்ற உயரிய வானவியல் விருது கிடைத்துள்ளது. இந்த விருதை மேலும் 2 பேரும் பகிர்ந்துகொள்கின்றனர்.

அமெரிக்க விண்வெளி கழகத்தின் ஒரு பிரிவான ஹனார்ஜி அஸ்ட்ரோ பசிபிக் என்ற அமைப்பின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் வானவியல் துறையில் சிறப்பாக பணியாற்றுபவர்களுக்கு புரூனே ரோசாய் என்ற உயரிய விருது வழங்கப்பட்டு வருகிறது.

2006ஆம் ஆண்டிற்கான இந்த விருது அமெரிக்காவில் வாழும் இந்தியப் பேராசிரியர் தீப்தா சக்கரவர்த்திக்கும், ஆம்ஸ்டர்டாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரேவிஜ்ஹந்தாவுக்கும், நாசா விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த டாஸ்ட் கோ ஹேம்யார்டுக்கும் கூட்டாக கிடைத்துள்ளது.

நியூட்ரான் நட்சத்திரங்களைப் பற்றிய ஆராய்ச்சி, ஹைனார்ஜி அஸ்ட் ரோபிசிக்ஸ் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகள் ஆகியவற்றுக்கான இந்த விருது இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதுக்காக இவர்கள் 3 பேருக்கும் ரூ.67 ஆயிரத்து 500 வழங்கப்படும். அதோடு ஒரு பட்டயச் சான்றிதழும் அளிக்கப்படும். (g)

# வீதி விபத்துக்களை விசாரிக்க விசேட பிரிவு ஆரம்பிப்பு

(கொழும்பு)

வாகனங்களை கவனக்குறைவாகவும் வேகமாகவும் செலுத்தி விபத்துக்களை விளைவிக்கும் சாரதிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று சட்டா அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணம் கவனக்குறைவும் ,வேகமாக வாகனங்களைச் செலுத்துவதுமே என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

வருடாந்தம் வாகன விபத்துக்களில் சுமார் 2ஆயிரம் பேர் இறந்துள்ளார்கள். 2ஆயிரம் பேர் வரை காயமடைந்திருக்கிறார்கள்.

வீதி விபத்துக்கள் காரணமாக ஒவ்வொரு மணித்தியாலமும் குறைந்தது 6 பேர் மரணிக்கிறார்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் 45 வயதிர்குட்பட்டவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வீதி விபத்துஆராய்ச்சி வலையமைப்பை அண்மையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே சட்டமா அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்கள்பற்றி விசாரணை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் 10சட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட விசேட பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (த-9)

# 60 பொருளாதார நிலையங்கள் நாடு முழுவதும் நிறுவப்படும்

(கொழும்பு)

நாடுமுழுவதும் 60 பொருளாதார நிலையங்களை நிறுவுவதற்கு கிராமிய அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கிராம மக்களின் உற்பத்திகளை சேகரித்துக் கொள்வனவு செய்வதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும் என்று கிராமிய அபிவிருத்தி அமைச்சர் டி.எம். ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

இதற்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்களை உருவாக்குவதன் மூலம் கிராம மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# மாணவருக்கான சித்திரப் போட்டி

(திருகோணமலை)

கலாசார அமைச்சு இலங்கை கலைச்சபை அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களிடையே சித்திரப்போட்டியொன்றை நடத்த திட்டமிட்டுள்ளது.இதற்கான சித்திரங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் 150 மாணவர்களின் ஓவியங்கள் தெரிவுசெய்யப்படும். இந்த 150பேரும் இரண்டாம் சுற்றில் கலந்துகொள்ள அனுமதிக்கப் படுவர்.

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான ஒருநாள் பயிற்சி செயலமர்வும் நடத்தப்படும் செயலமர்வின் முடிவில், சிறுவர்கள் விரும்பும் ஓவியங்களை வரைய அனுமதிக்கப்படுவர்.

வெற்றி பெறும் மாவட்ட மட்ட, மாகாண மட்ட சிறுவர்களுக்கான சான்றிதழ்கள் அன்றைய தினமே வழங்கப்படும்.

பயிற்சி செயலமர்வில் தெரிவாகும் ஓவியங்கள் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி அக்டோபர் முதலாம் திகதி தேசிய கலாபவனத்தில் நடைபெறும் ஓவியக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இப்போட்டி 5 பிரிவுகளாக நடத்தப்படும் ஆரம்பபிரிவு-(தரம்-1,தரம்-2) முன் ஆரம்ப பிரிவு(தரம்-2, தரம்-3, தரம்-4, தரம்-5) கனிஷ்ட பிரிவு (தரம்-6,தரம்-7,தரம்-8) சிரேஷ்ட பிரிவு(தரம்-9, தரம்-10,தரம்-11) சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு (தரம்-12, தரம்13)

சகல ஓவியங்களும் 18"X 14" அளவினதாக இருக்கவேண்டும். 'ஓவியத்தின் பின்னால் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் பெயர், வயது, போட்டியிடும் பிரிவு, மாவட்டம் என்பன எழுதப்பட வேண்டும்.

வெளிமாவட்ட மாணவர்கள் தமது ஓவியங்களை இம் மாதம் 31 ஆம்திகதிக்கு முன்னர் 'செயலாளர், தேசிய கலைப் பிரிவு , கலாபவனம் ஆனந்த குமாரசாமி மாவத்தை, கொழும்பு-7 'என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

தேசிய சிறுவர் கலைவிழாவன்று தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு சான்றிதழுடன் விருதும் வழங்கப்படும். (கு)

# மதுபானத்தை இலஞ்சமாகப் பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு மதுபான போத்தல் ஒன்றை இலஞ்சமாக பெற்றதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருதானையில் இடம்பெற்ற வாகன விபத்து சம்பவமொன்றில் தனியார் பஸ் சாரதியை விடுவிக்கும் முகமாக மதுபானத்தை இந்தப் பொலிஸ் கான்ஸ்டபிள் இலஞ்சமாக பெற்றார் என இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மருதானை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருகின்ற பொலிஸ் கான்ஸ்டபிளே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு மதுபான போத்தலை இலஞ்சமாகப் பெறுகின்றபோது பொலிஸ் நிலையத்திற்குள்ளே வைத்து இவர் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# திபெத்தின் பிரிவினையை எதிர்க்கிறோம்

## அனுரா பிரியதர்சன யாப்பா

(கொழும்பு)

ஒன்றுபட்ட சீனா என்ற கோட்பாட்டில் தொடர்ந்து உறுதியாக இருப்பதாக ஊடக அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

திபெத்திய புத்த மதத் தலைவர் தலாய்லாமாவை புத்த ஜெயந்தி குழுவினர் இங்கு அழைத்துள்ளமை சர்ச்சையை எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் கடந்த புதன்கிழமை ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பாவிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது,

இந்த விடயத்தில் முடிவெடுக்க எமக்குக் கால அவகாசம் தேவை என்றும் ஒன்றுபட்ட சீனா என்ற கோட்பாட்டையே நாம் நீண்டகாலமாக ஆதரித்து வந்துள்ளோம் என்றும் கூறினார்.

சீனாவுடனான கொழும்பின் நல்லுறவு நீடிப்பதாக அமைச்சரவைக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு தலாய்லாமாவை இலங்கைக்கு அழைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அரசாங்கம் அனுமதி மறுத்தது.

சீனாவிடமிருந்து திபெத் விடுதலை கோரி வருகிறது. திபெத்திய விடுதலைக்கான பணிகளில் தலாய்லாமா ஈடுபட்டு வருகிறார். அவர் கடந்த 1959ஆம் ஆண்டு இந்தியாவுக்குள் தஞ்சமடைந்தார்.

இலங்கை ஒரு புத்த மத நாடாக இருந்தபோதும் சீனாவுடன் வர்த்தக மற்றும் இராணுவ உறவுகளை நெருக்கமாக்கிக் கொண்டிருப்பதால் தலாய்லாமாவை அங்கீகரிக்க மறுத்துவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் வேலைத் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் தேசிய மட்டத்திலான வேலைத் திட்டமொன்றைச் சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவு தற்போது ஆரம்பித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் நாட்டின் பிரதான 13 நகரங்களில் இந்த விசேடத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய ஓசோன் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி டபிள்யூ எல்.சுமதிபால தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் ஓசோன் வாயுப் படலத்தைச் சேதமாக்கும் குளோரோ புளோரோ காபன் வாயுப் பாவனையை முற்றாகத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பாவனையிலுள்ள குளிரூட்டிகள் மற்றும் வாயு சீராக்கிகளில் குளோரோ புளோரோ காபன் வாயுவிற்குப் பதிலாக கைரோகாபன் வாயுவை மீள் நிரப்புவதற்கும், 2007ஆம் ஆண்டு தொடக்கம் குளோரோ புளோரோ குளிர் சாதனப்பெட்டிகளை இறக்குமதி செய்வதை முற்றாக கைவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய ஓசோன் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-9)

# சவர்க்கார வகைகளுக்குத் தட்டுப்பாடு

சன்லைற் மற்றும் வாசனைச் சவர்க்கார வகைகளுக்கு குடாநாட்டில் திடீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தாராளமாக வாங்கக் கூடியதாக இருந்த இச் சவர்க்கார வகைகள் திடீரென மாயமாய் மறைந்து விட்டனவா அல்லது விற்பனையாளர்களின் கைவசமிருந்தனவெல்லாம் விற்றுத் தீர்க்கப்பட்டு விட்டனவா எனத் தெரியாத நிலையில் இத் திடீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனினும் சில இடங்களில் சன்லைற் சவர்க்காரம் 60, 70 ரூபாவுக்கு விற்பனையாவதாகவும் தெரிகிறது.

கொழும்பிலிருந்து சவர்க்கார வகைகள் வருவதில் ஏற்பட்ட தாமதமே இதற்குக் காரணமென்றும், அவை வந்து சேர்ந்ததும் இத் தட்டுப்பாடு நீங்கிவிடுமென்றும் கூறப்பட்ட போதிலும் எப்பொழுது நீங்கும் எனத் தெரியாத நிலையில் பாவனையாளர்கள் தடுமாறிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதேநேரம் கிளினோல் போன்ற சலவைப் பவுடர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (து)

## துணைப்படை வீரர் சாவு

தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் கடந்த புதன்கிழமை சாவடைந்துள்ளார்.

மன்னார், செம்மந்தீவு முருங்கனை சொந்த இடமாகவும், மன்னார் பள்ளமடுவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட வீரவேங்கை ஜெயந்திரன் என்றழைக்கப்படும் முத்தையா ஜெயந்திரன் என்பவரே சாவடைந்தவர் என விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ச)

# கிளிநொச்சிக்கான தொலைபேசி இணைப்பு மீள அமைக்குமாறு வேண்டுகோள்

'கடந்த இரண்டு மாதங்களாக பாராளுமன்றக் கட்டடத்தில் இருந்தும், பாராளுமன்ற உறுப்பினர் விடுதியில் இருந்தும் கிளிநொச்சி தேர்தல் தொகுதி மக்களுடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. கிளிநொச்சி மாவட்டத்துடன் தொடர்புகொள்வதிற்காக மாவட்ட குறியீட்டு இலக்கம் 021ஐ அழுத்திப் பிராந்தியக் குறியீட்டு இலக்கமான (228) இல் 22 ஐ அழுத்தி 8ஐ அழுத்தும்போது அழைத்த இலக்கம் பாவனையில் இல்லை என்று பதிவுசெய்யப்பட்ட தகவலை மட்டும் கேட்க முடிகிறது. பாரபட்சமான முறையில் திட்டமிட்ட ரீதியிலேயே இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்திற்கான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அந்தத் தேர்தல் தொகுதி மக்களுடனோ, அரச அதிகாரிகளுடனோ உடனுக்குடன் தொடர்புகொண்டு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து தொலைபேசி இணைப்பை சீர்செய்ய உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் இது தொடர்பான பதிலை அறியத்தருமாறும் வேண்டுகின்றேன்' என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சபாநாயகருக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். (து)

## இரத்தினபுரிக்கு புதிய ஆயர்

(யாழ்ப்பாணம்)

இரத்தினபுரி மறை மாவட்டத்தின் புதிய ஆயராக ஜவன் திலக் ஜெயசுந்தர அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனம் ரோமிலிருந்து நேற்றுமுன்தினம் வெளியாகியது. கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழ்மொழியில் நன்கு புலமை உடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# ஊடக ஆசிரியர்களுக்கு ஜனாதிபதி நேரடி மிரட்டல்

(கொழும்பு)

சிங்கள, ஆங்கில ஊடகங்களில் செய்திகளை 'அடக்கிப் போடுங்கள்' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடி மிரட்டல் விடுத்துள்ளார்.

சிங்கள, ஆங்கில ஊடகங்களின் ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது சில ஊடக ஆசிரியர்களை வெளிப்படையாகக் குறிப்பிட்ட 'நீங்கள் செய்திகளை அடக்கிப் போடுங்கள்' என்று எச்சரித்துள்ளார்.

மேலும் நோர்வேயில் தனக்கு பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் இல்லை என்றும், தாம் நோர்வேக்குச் சென்று பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பதற்காகவே தற்போதைய தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்றும் இதை சிங்கள ஊடக ஆசிரியர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் மஹிந்த கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் தாம் பேச்சு நடத்த முன்வருவது, சர்வதேசத்தின் அழுத்தத்தினால்தான் என்றும் இந்தக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (து)

# பாரவூர்தி தடம்புரண்டது





கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சீமெந்து ஏற்றிச் சென்று கொண்டு இருந்த பாரவூர்தி ஒன்று விசுவமடு கோணாவில் குளத்திற்குள் நேற்றுமுன்தினம் தடம்புரண்டது.

எனினும் இதனை ஒட்டி வந்த சாரதிக்கும் தொழிலாளிகளுக்கும் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்ல.

உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்ற விசுவமடு காவல்துறை பணிமனைப் பொறுப்பாளர் புலன் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் போக்குவரத்து இடையூறுகளையும் நிவர்த்தி செய்துள்ளார். தொடர்ந்தும் அப் பாரவூர்தியினை குளத்திற்குள் இருந்து எடுக்கும் நடவடிக்கை நடந்த வண்ணம் உள்ளது. (து)

# 6 மாதங்களாயினும் கட்டட வேலைகள் முடிவடையாத எரிபொருள் நிரப்பு நிலையம்

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் வீரசிங்கம் மண்டபத்துக்கு அண்மையில் அமைந்திருந்துள்ள சிறு தகரக் கொட்டகையில் இயங்கிவந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சங்கத்தின் முயற்சியின் பலனாக நிரந்தர கட்டடமொன்றை அமைத்துக் கொடுக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை யெடுத்ததன் பயனாக ஆறுமாதங்களுக்கு முன் நிரந்தர கட்டடமொன்றை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாயின.

கட்டட வேலைகள் ஆரம்பமாகி 6 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை அக்கட்டட வேலைகள் முடியாத நிலையில் அங்கு டீசல் மாத்திரமே தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனால் இந்நிலையத்தின் வாடிக்கையாளர்கள் பெற்றோல் மற்றும் இதர பொருட்களுக்காக வேறு இடங்களை நாடிச் செல்வதால் பொருளாதார ரீதியில் யாழ். ப.நோ.கூ.சங்கத்துக்கு பலத்த நட்டத்தை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையைக் கருத்திற் கொண்டு இக் கட்டட வேலையை விரைவில் பூர்த்தி செய்ய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், கட்டட ஒப்பந்தக்காரர்களும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மேற்படி சங்கத்தின் உதவி முகாமையாளர் எஸ்.ரி.கணநாதன் தெரிவித்துள்ளார். (து)

# குற்றவியல் வழக்குகள் தொடர்பாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்

(கொழும்பு)

குற்றவியல் வழக்குகள் தொடர்பாக தீவிர குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் விசேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் 9 ஆயிரம் குற்றவியல் வழக்கு விசாரணைகள் பதிவு செய்யப்பட்டதாக சொலிஸிட்ட ஜெனரல் சி.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி சட்டமா அதிபருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தீவிர குற்றப் பத்திரிகை தயாரிப்பது உட்பட மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைகளை ஒப்படைப்பது மற்றும் வழக்கு விசாரணைகளை நிறைவு செய்யும் விசாரணைகள் என்பவை துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சமபவங்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாத வழக்குகள் பல உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு பிரதி சொலிஸிட்ட ஜெனரலின் கண்காணிப்பின் கீழ் அரச சட்டத்தரணிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (த-9)

## இன்று ஒரு தகவல்

# உயிர் வாழ்க்கை

ஒரு சமயம் வயதான ஒருவர் புத்தரிடம் வந்தாராம். கொஞ்சக் காலம் அங்கேயே இருந்தார். உண்மையான துறவியாகிவிட்டாராம் அந்த சீடரும். ஒரு நாள் புத்தர் அவரைக் கூப்பிட்டார். "துறவியாரே! உங்களுக்கு இப்போது வயது என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த சீடர். "ஐந்து வயதாகிறது" என்றாராம்.

இதைக் கேட்டதும் புத்தருக்கு ஆச்சரியம். "உங்களுக்கு 70 வயதிற்கு மேல் இருக்கும். ஆனால் ஐந்து வயதுதான் ஆகிறது என்று சொல்கிறீகளே! என்ன காரணம்?" என்று கேட்டார். அதற்கு அந்த சீடர் "ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால் உண்மையான ஞானம் எனக்குக் கிடைத்து ஐந்து வருடம்தான் ஆகிறது. அன்பு என் உள்ளத்தில் தோன்றியிருப்பதும் இந்தக் காலத்தில்தான். இதற்கு முன்பு நான் வாழ்ந்த வாழ்க்கை ஒரு கனவு போல் தோன்றுகிறது. அந்த வாழ்க்கையினால் எந்தப் பலனுமில்லையென தோன்றுகிறது. அதனால்தான் எனக்கு ஐந்து வயது என்று சொன்னேன்" என்றாராம்.

அவர் ஐந்து வருடம் இந்த உலகில் வாழ்ந்ததாக நினைக்கிறார். அது உண்மைதான். இந்த உலகத்தில் உயிருடன் வாழ்வோரையெல்லாம் உயிர் வாழ்வோர் என்று ஒத்துக் கொள்ள முடிவதில்லை. வள்ளுவரே இதை ஒத்துக் கொள்ளவில்லை 'விசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர்" என்கிறார் அவர். பழி உண்டாகாமல் வாழ வேண்டும். அதுதான் வாழ்க்கை.

அடுத்தவர்களுக்கு உதவி செய்து அதனால் வரும் புகழும் வாழவேண்டும். அடுத்தவர்களுக்கு கெடுதல செய்து பழியோடு வாழ்வோரை வாழ்வோராக ஏற்க் முடியாது. கெட்ட எண்ணங்கள் இல்லாமல் போக வேண்டும். அப்போது தான் தெளிவும், ஞானமும் வரும்.

ஒரு குரு இருந்தார். அவரைப் பார்த்து ஆசீர்வாதம் பெறலாம் என்று ஒரு சீடன் போனான். போய்க் கொண்டிருககும் போது... வழியில் ஒருயோகி "எங்கே போகிறாய்?" என்று கேட்டார். இவர் வபரத்தைக் கூறினார். அந்தக் குருவின் மீது இந்த யோகிக்கு ஏற்கனவே பொறாமை. அதனால் அந்த சீடரைப் பார்த்து "உனது குருவுக்கு எதுவுமே தெரியாது அவர் ஒரு முட்டாள் நீ அவரை விடப்பெரிய முட்டாள். அதனால்தான் அவரது சீடன் ஆனாய். உனது குருவால் ஏதாவது அற்புதம் செய்து காட்டமுடியுமா? என்னை மாதிரி அவரால் நீர்மீது நடக்க முடியுமா? ஆகாயத்தில் பறக்க முடியுமா? இல்லை பூமியில் புதைந்து கிடக்க முடியுமா? அவரால் எதுவும் முடியாது! அப்படிப்பட்ட குருவிடம் போய் ஏன் நேரத்தை வீணாக்குகிறாய்?" என்றாராம்.

இதற்கு அந்த சீடன். "நான் ஏன் அவரை குருவாக ஏற்றுக் கொண்டு வணங்குகிறேன் என்றால் அவர் ஒரு போதும் கோபப்படமாட்டார். மற்றவரைக் குறை கூறமாட்டார். இதைத் தான் அற்புதங்கள் யாவற்றிலும் பெரியதாக நான் எண்ணுகிறேன்" என்றானாம். இதைக்கேட்டதும் அந்த யோகி தலைகுனிந்து கொண்டு போனாராம்.

குளத்தின் மேலே நடக்கும் அதிசயத்தைவிட கோபப் படாமல் நடக்கும் அதிசயம்தான் பெரியது. அப்படி நடக்கப் பழக்கப் படுத்திக்கொள்வதுதான் மனிதனுக்கு நல்லது. கவலை எப்படி வருகின்றது என்பதற்கு ஒருவர் காரணம் சொன்னார். முதலில் கோபம் வருமாம். அதைக் காட்டுவதற்கு எதிரில் யாரும் இல்லாவிட்டால் அந்தக் கோபம் தன்மீதே திரும்புமாம். அந்தச் சூழலில் அதைக் கவலை என்கிறோம். கவலை வருவதற்கு இப்படியும் ஒரு வழி. மனதில் சாந்தியில்லாமல் வாழ்ந்தால் அது என்ன வாழ்க்கை?

சர்வாதிகாரி ஒருவன் மரணப்படுக்கையில் கிடந்தான். வைத்தியர்கள் கைவிட்டு விட்டனர். அவருக்கு வைத்தியம் செய்த பெரியவர் ஒருவர் வந்தார். "இறந்து கொண்டிருப்பவன் மனச் சாந்தியுடனாவது போய்ச் சேரட்டும்" என்று நினைத்தார். "மேன்மைதாங்கிய அதிபரே! தங்கள் எதிரிகளை மன்னித்து விடுகிறீர்களா?" என்று கேட்டார். சர்வாதிகாரி சாவகாசமாகப் பதில் சொன்னாராம் "ஐயா! நான் மன்னிபதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால இப்போது எனக்கு விரோதிகள் யாருமில்லை ஏனென்றால் நான் அவர்களை ஏற்கனவே கொன்றுவிட்டேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு எமது பங்களிப்பை அதிகரிப்போம்

## கனடா கன்சர் வேட்டிவ் கட்சி

(கொழும்பு)

இலங்கை சமாதான முயற்சிக்கான பங்களிப்பை ஆட்சிக்கு வந்ததும் அதிகரிப்போம் என்று கனடாவின் கன்சர்வேட்டிவ் கட்சி கடந்த வியாழக் கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, நோர்வேயினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளிற்கான இராஜதந்திர ரீதியான பங்களிப்பை கனடாவின் கன்சர்வேட்டிவ் ஆட்சிக்கு வந்ததும் அதிகரிக்கும்.

சமாதான முயற்சிகளில் பங்கேற்ற நீண்ட வரலாற்றைக் கொண்ட கனடா, இலங்கையின் சமாதான முயற்சிகளில் தனது பொறுப்பை அதிகரிக்கும்.

லிபரல் கட்சியரசு சமாதான முயற்சியில் காத்திரமான பங்கை வழங்கும் என பலமுறை வாக்குறுதியளித்திருந்தாலும், கனடாவின் பங்களிப்பு குறைவாகவே இருந்தது.

ஆழிப்பேரலை நிவாரணம் பாதிக்கப்பட்டவர்களிற்கு சம அளவில் வழங்கப்படவில்லை என்பதில் எமக்கு அதீதமான அக்கறையுண்டு. கன்சர்வேட்டிவ் கட்சி அரசானது கனடா சார்பான இலங்கைக்கான மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை அதிகரிப்பதோடு அவ்வுதவி ஏற்றத்தாழ்வின்றி பாதிக்கப்பட்ட மக்களிற்கு அரசசார்பற்ற உதவி நிறுவனங்களினுடாகச் சமமாகப் பங்கீடு செய்யும் நடவடிக்கை எடுக்கும்.

இந்த அதிகரிக்கப்பட்ட நிதியுதவியானது கன்சர்வேட்டிவ் கட்சியின் பிறநாடுகளிற்கான அபிவிருத்தி நிதியாக அறிவிக்கப்பட்டுள்ள அடுத்த ஐந்து ஆண்டுகளிற்கான 450 மில்லியன் டொலர்கள் உதவித் தொகையில் அடங்கும்.

இதில் இலங்கைக்கான புதிய உதவித் தொகை கனடாவின் சமாதான முயற்சிகளிற்கான பங்களிப்பு மற்றும் களக்கணிப்பீடு என்பனவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# அனைத்து படைப்பலத்தையும் வெல்லக்கூடிய சக்தி வாய்ந்த கட்டமைப்புக் கொண்ட நவீன புலிகளாக உருவெடுத்துள்ளோம்

## சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையின் சிறப்புத் தளபதி நகுலன்

(கிளிநொச்சி)

இலங்கையின் அனைத்துப் படைப்பலத்தையும் வெல்லக்கூடிய சக்தி வாய்ந்த படைக்கட்டமைப்புக் கொண்ட நவீன புலிகளாக இன்று உருவெடுத்துள்ளோம் என சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத்தளபதி நகு லன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட அனைத்து மக்களுக்குமான இராணுவப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்புக்குரிய மக்களே, நாங்கள் கடந்த கால வரலாறுகளை மறந்துவிட முடியாது. எங்களுடைய விடுதலைப் பேராட்டத்தையும் எங்களுடைய உண்மையான நிலைப்பாடுகளையும் சர்வதேச சமூகம் உணர்ந்து எங்களுக்கு முன்னாள் வந்து நின்று கொண்டு எமது பிரச்சினைகளை நீதியாக தீர்க்கும் என்று இனியும் கனவு காண முடியாது.

ஏனெனில் மன்னார் பகுதியில் ஒரு சிறுவனுடன் குடும்பத்துக்கு நடந்த கதியும், குறுகிய நாட்களுக்குள் மானிப்பாயில் நடந்த கோரச்சம்பவங்களையும் தட்டிக்கேட்காத சர்வதேச சமூகம் எமது முழுப்பிரச்சினையில் எவ்வாறு தீர்வு காணும். எனவே இவ்வாறு நாளுக்கு நாள் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படுகின்ற கொடுமைகளை நாங்கள் ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டியவர்களாக இன்றைய காலகட்டத்தில் உள்ளோம்.

உங்களுக்குத்தெரியும் இந்த கிளிநொச்சி மண்ணை மீட்டெடுப்பதற்காக எமது பேராளிகள் கொடுத்த உயிர்த்தியாகங்களும் சிந்திய குருதியும் தான் இன்று நாங்கள் இந்த இடத்தில் நின்று கதைக்கக் கூடிய நிலையை உருவாக்கியது.

ஆனால் இன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் ஒவ்வொரு நாள் பொழுதுகளும் நிம்மதியாக இல்லை. இன்று உயிருடன் இருப்பானா? நாளைக்கு இருப்பானா? நாளைக்கு சூரிய உதயத்தைப் பார்ப்பானோ? என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர்.

இன்று மக்கள் படையாக பயிற்சி எடுக்க வந்திருக்கும் உங்களிடம் உங்களின் இராணுவப் பயிற்சியின் ஊடாக நீங்கள் அனைவரும் நாங்கள் பாது காத்து நின்ற நீண்ட கிலோமீற்றர் தூரத்தை நீங்கள் வந்து காத்து நிற்பீர்களாக இருந்தால் நாங்க்ள் அதற்கு அப்பால் போய் எமது மண்ணில் தரித்து நிற்கும் சிங்கள காடையரை சுக்குநூறாக்கி எமது தாயகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு காடையருக்கும் சமாதி கட்டுவோம்.

நீங்கள் எங்கள் தலைவர் பற்றி நன்றாக அறிந்து கொள்ளவேண்டும். எங்களுடைய தலைவரை வென்று விட வேண்டும் என்பதற்காகவும் அழித்து விட வேண்டும் என்பதற்காகவும் முயற்சித்தவர்கள் தங்களுடைய இறுதிக் காலத்தில் தமது இயலாமையால் எமது தலைவரைப் புகழ்ந்த வரலாறுகள் உண்டு. இதற்கு இந்தியா கூட விதிவிலக்கல்ல. இந்தியாவில் டிக்சித் தொடக்கம் இலங்கையில் முன்னாள் இராணுவத்தளபதி மற்றும் ரத்வத்தை கூட எமது தலைவரை புகழ்பவர்களாகத்தான் உள்ளார்கள். ஏனெனில் தலைவர்தனது மதிநுட்பமான செயற்பாடுகளால் இலங்கை இராணுவத்திற்கும் சர்வதேசத்திற்கும் தகுந்த பதிலைக் கொடுத்தார். (க-4)

## உயர் தொழில் நுட்பக் கல்லூரி வித்தியாலயமாக தரமுயர்த்தப்படும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள 9 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் உயர் தொழில்நுட்ப வித்தியாலயங்களை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டத்திற்கு அமைய யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, பதுளை, இரத்தினபுரி, மருதானை, அநுராதபுரம், குருநாகல், காலி ஆகிய பிரதேசங்களிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகள் உயர் தொழில்நுட்ப வித்தியாலயங்களாக தரமுயர்த்தப்படும் என்று தொழில் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ். தொழில் நுட்பக்கல்லூரியை உயர்தொழில் நுட்ப வித்தியாலயமாக தரமுயர்த்தும்பொருட்டு தென் கொரிய அரசாங்கம் 2.3 மில்லியன் அமெரிக்கடொலர்களை வழங்க இணங்கியுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் அரசுகைச்சாத்திட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (க-39)

## சர்வதேச சமூகம் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் -அனுர குமாரதிஸ நாயக்க

(கொழும்பு)

சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல சகல தரப்பினரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்திள்ளது.

சர்வதேச சமூகம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இது தொடர்பில் தொடர்ச்சியாக அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் என கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் தற்போது இடம்பெற்று வரும் பயங்கரவாதச் செயல்களை விடுதலைப்புலிகளே செய்கின்றனர். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். முன்னேற்றமடைந்த சமாதானப் பேச்சுக்களை அவர்களே இடையில் முறித்துக் கொண்டனர்.

இதேவேளை, பேச்சுவார்த்தையினை முறித்துக்கொண்டவர்களே அதனை ஆரம்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (து-4)

# ஆதி திரை விமர்சனம்

குடும்பத்தை அழித்தவர்களைக் குறிவைத்து பழி தீர்க்கும் இளைஞன் – இளம் பெண்ணின் கதை.

அம்மா – அப்பா – தத்தா – பாட்டி என்று கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தவன் ஆதி. அவனது அப்பா கடமை தவறாத பொலிஸ் அதிகாரி. ரவுடிகளை ஒழிக்க அவர் எடுக்கும் அதிரடி நடவடிக்கை காரணமாக ஆத்திரம் அடைந்த தாதா ஆர்.டி.எக்ஸ் ஆதியின் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரையும் கொலை செய்கிறான்.

ஆதி அதிர்ஷ்டவசமாக தப்புகிறான். ஆதியின் மாமா, மகள், சித்தப்பா ஆகியோரும் தப்புகிறார்கள். ஆதி டெல்லியில் வசிக்கும் ஒரு தம்பதியரால் வளர்க்கப்படுகிறான். தன் குடும்பத்தை அழித்த பி.ஆர்.டி.எக்ஸ்பீ ஐயும் அவனது கூட்டாளிகளையும் பழிக்குப் பழிவாங்க அவன் சென்னை வருகிறான்.

கல்லூரியில் படிக்கும் அவன் அஞ்சலி என்ற இளம் பெண்ணை சந்திக்கிறான். அவள்தான் அவனுடைய மாமன்மகள். அவளும் ஆர்.டி.எஸ்.கூட்டாளிகளை பழிவாங்கும் பயிற்சியில் இறங்குகிறாள். ஆனால் அவர்களுக்குள் என்ன உறவு என்பது இருவருக்கும் தெரியாது.

ஆர்.டி.எஸ்க்கு ஆதரவாக இருந்த முன்னாள் பொலிஸ் அதிகாரியை அஞ்சலி கொலை செய்கிறாள். ஆர்.டி.எக்ஸ் தம்பி 3 பேரை ஆதி தீர்த்துக் கட்டுகிறான். இதனால் தாதா ஆர்.டி.எக்ஸ் ஆவேசம் அடைகிறான். ஆதியையும், அஞ்சலியையும் தனது வலையில் சிக்க வைக்கிறான்.

ஆர்.டி.எக்ஸ் கதையை ஆதி அழித்தானா? அஞ்சலிக்கும் அவனுக்கும் உள்ள சொந்தம் தெரியவந்ததா? இருவரும் இணைந்தார்களா என்பது கிளை மாக்ஸ்.

ஆதியாக விஜய். அமர்க்களப்படுத்துகிறார். ஆரம்பத்தில் தென்றலாக புன்னகைக்கும் அவர், பின்னர் புயலாக சீறுகிறார். குடும்ப பாசத்தை எண்ணி ஏங்குவது



உருக்கம். திரிஷாவுடன் தோன்றும் காட்சிகள் இதமான வருடல்.

வில்லனுடன் மோதுவது அதிரடி. ரசிர்கள் எதிர்பார்க்கும் எல்லா அம்சங்களையும் அள்ளிக் கொடுத்து அசத்துகிறார்.


திரிஷா அஞ்சலியாக வந்து அசத்துகிறார். அறிமுக் காட்சியில் புறாவுடன் வந்து புன்னகை சிந்தும் அவர் அடுத்த நொடியில் கத்தி – ரத்தம் சகிதம் காட்சியளித்து அதிரவைக்கிறார். விஜய்யுடன் பழகும் விதம் பரவசம். ஆவேசப்படும்போது கண்களில் கனல் தெரிகிறது. படம் முழுவதும் வந்து பரவசமூட்டுகிறார்.

விஜய் சித்தப்பாவாக நாசர், வித்தியாசமான பாத்திரம். பிரகாஷ்ராஜ் சில காட்சிகளில் வந்தாலும் பிரமிக்க வைக்கும் நடிப்பால் படம் முழுவதும் நிறைந்திருக்கிறார். புல்லட்பீ விவேக் நகைச்சுவை அதிவேட்டு.

தெலுங்கு ஹீரோ சாய்குமார் வில்லனாக தோன்றி மிரட்டுகிறார். உச்சக் கட்ட காட்சிக்கு இவரது நடிப்புக் கூடுதல் விறுவிறுப்பு மிரள வைக்கிறார். விஜயகுமார், மணிவண்ணன், சீதா, லிவிங்ஸ்டன், ராஜ்கபூர், ராஜன்பி. தேவ் ஆகியோரும் நடித்திருக்கிறார்கள். தெலுங்கு 'அத்தன ஒக்கடே' படத்தின் வாடை தெரியாமல் விஜய் பார்முலாவுடன் கதையைக் கொண்டு போய் பாராட்டு பெற்றிருப்பவர் டைரக்டர் ரமணா. விறுவிறுப்பான திரைக் கதையுடன் பஞ்ச் வசனங்களும் சேர்த்து பரபரப்பை உருவாக்கி இருக்கிறார். ஏற்க முடியாத பிலாஜிக்களும் உண்டு என்றாலும் காட்சி அமைப்புகளால் அதை மறக்கச் செய்திருக்கிறார்.

இசை: வித்யாசாகர், பாடல்களும், பின்னணியும் அம்சம். பா.விஜய் எழுதிய 'ஒல்லி ஒல்லி இடுப்பு' பாடல் ஒரு ரவுண்டு வரும். சவுந்தரராஜன் ஒளிப்பதிவு நிமிர வைக்கிறது. சுவிட்சர்லாந்து இயற்கை அழகு இதம்.

***ஆதி – பாதி தென்றல், மீதி மின்னல்***



'வேட்டையாடு விளையாடு'
கமலஹாசன் – ஜோதிகா

# சினிமாச் சிதறல்

நடிகை ஸ்ரேயா ரூ.25 இலட்சம் சம்பளம் வாங்குகிறார்.

* *

'இது கதையல்ல காவியம்' படத்தில் நடிகர் நடிகைதொழில் நுட்பக் கலைஞர்கள் அனைவரும் புதியவர்கள்.

## கல்லு ஒண்ணு மாங்காய் ரெண்டு

'பிப்ரவரி 14' படத்தை இயக்கிய எஸ்.பி.ஹோசிமின், அடுத்து இயக்கும் 'வால்டாக்ஸ் ரோடு' படக் கதையை மாதவனிடம் சொன்னாராம். பக்கா ஆக்ஷன் வித் லவ் சப்ஜெக்ட் என்பதால் உற்சாகமடைந்த மாதவன், அவரை வெகுவாகப் பாராட்டினாராம்.

மேற்கொண்டு அந்தப் படம் சம்பந்தமான பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. தவிர, ஆர்யாவிடமும் கதை சொல்லி அசத்திய ஹோசிமின், விரைவில் படப்பிடிப்பைத் தொடங்க ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறாராம்.

**கல்லு ஒன்னு மாங்காய் ரெண்டு.**

## அடுத்த வாரிசு

பாக்யராஜ் அவரது மனைவி பூர்ணிமா இருவருமே பிரபல நடிகர் – நடிகை பட்டியலில் இடம்பிடித்தவர்கள். பாக்யராஜ் மகள் சரண்யாவுக்காக 'பாரிஜாதம்' படம் எடுத்து அவரை கதாநாயகி ஆக்கி இருக்கிறார்.

இப்போது பாக்கியராஜின் மகன் சாந்தனுவும் கதாநாயகன் ஆகிறார். கலைப்புலிதாணு இந்த படத்தை தயாரிக்கிறார். விரைவில் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது.





'உயிர்'
ஸ்ரீகாந்த் – ஸம்ருதா

ரஞ்சித்குமார் இயக்கும், 'நண்பனின் காதலி' படத்தில் என்.எஸ்.கிருஷ்ணன் மகன் என்.எஸ்.கே.நல்லதம்பி முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

* * *

யுவன்சங்கர் ராஜாவும், ஸ்ரீகாந்த் தேவாவும் தலா 10க்கும் அதிகமானபடங்களுக்கு இசை அமைத்து வருகிறார்கள்.

* * *

நினைத்து நினைத்து பார்த்தேன் பட நாயகி டெல்லியைச் சேர்ந்த மாடல் அழகி

* * *

கதை நன்றாக இருந்தால் மட்டுமே சிபிராஜ் அந்தப் படத்தில் நடிக்க ஒப்புக்கொள்கிறாராம்.

* * *

ரசிகர்மன்றம் படத்தின் நாயகி உமா. இயக்கம்: புகழேந்தி தங்கராஜ்.

# தமிழீழத்தை அமைக்கும் காலம் நெருங்கிவிட்டது! த.தே.கூட்டமைப்பு எம்.பி ஜெயானந்தமூர்த்தி

(மட்டக்களப்பு)

தமிழீழத்தை அமைக்கும் காலம் நெருங்கிவிட்டது. எனவே தேசியத் தலைவருடன் கைகோர்த்து நின்று நாம் அனைவரும் எமது உரிமையை வென்றெடுக்க வேண்டும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அம்பிளாந்துறையில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நான்கு வருடங்களாகின்றன.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் நயவஞ்சகத்தனமான முறையில் ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய ரணில் விக்கிரமசிங்க எந்த ஒரு முன்னேற்றத்தையும் அல்லது பயனையும் ஏற்படுத்தவில்லை.

இவ்வாறான பேச்சுக்களைக் காட்டியே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்கு ரணில் திட்டமிட்டார். எனினும் தமிழ் மக்கள் இதனைப் புரிந்துகொண்டு தேர்தலைப் புறக்கணித்தனர்.

இந்தத் தேர்தல் புறக்கணிப்பு மூலமே மஹிந்த ஜனாதிபதியானார். ஒரு வகையில் அது தமிழ் மக்கள் கொடுத்த பிச்சை என்றுதான் கூறவேண்டும்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக 27 கட்சிகளுடன் மஹிந்த ஒப்பந்தம் செய்திருந்தார். இதில் தமிழ் மக்களின் எந்த நலனும் உள்ளடக்கப்படவில்லை.

அதேவேளை, கடந்த கால இலங்கையின் ஜனாதிபதிகளுடன் ஒப்பிடும் போது மண்டைக்குள் எதுவும் இல்லாத ஜனாதிபதி என்றால் அது மஹிந்த ராஜபக்ஷ தான். ஏன் என்றால் நாங்கள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த போது ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை மற்றும் திருமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தோம்.

இந்தப் படுகொலையில் இராணுவம் சம்பந்தப்பட்டதை சுட்டிக்காட்டினோம். ஆனால் தாம் இந்தியா சென்றிருந்த காலத்தில் இந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறினார்.

உங்கள் சகோதரரை படைத்துறை அமைச்சின் செயலாளராக நியமித்திருக்கின்றீர்களே அவருக்குத் தெரியாதா? எனக் கேட்டபோது அவரையும் கூட்டிச் சென்றதாகக் கூறினார். இவ்வாறு முப்படைகளின் தளபதியாக இருந்தவர் தனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறும் போது வேடிக்கையாகவிருக்கின்றது.

இதேவேளை, இலங்கையின் நாடாளுமன்றுக்குள்ளும் எங்கள் போராட்டம் தீவிரமடைந்திருக்கின்றது. நாடாளுமன்றை இயங்கச் செய்யாத ஒரு சூழலை உருவாக்கியிருந்தோம். எங்களுடன் மலையகக் கட்சிகளும் கொழும்புத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மேல் மாகாண மக்கள் முன்னணியும் இணைந்து இருக்கின்றன.

இந்தப் போராட்டத்தால் அடுத்தது என்ன? என்ன நடக்கப் போகின்றது என்ற பீதியில் கொழும்பு கலங்கி நிற்கின்றது. ஜனாதிபதி நித்திரையில்லாமல் யோசித்துக் கொண்டிருக்கின்றார். சபாநாயகர் பின் கதவால்தான் வந்து அமர்வில் அமர்ந்து கொண்டார். இந்தச் சூழலில் தமிழீழ விடுதலைப்புலிகளோடு அரசு பேச்சுக்கு வராது புறக்கணித்தால் அவர்கள் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும்.

தற்காப்புப் பயிற்சி பெற்றவர்களாக எல்லைப் படையாக சண்டைப் படையணியாக தமிழினம் பலம் பெற்று நிற்கின்றது. எமது தாயக தேசத்தில் எறிகணை, விமானக் குண்டுவீச்சுக்களை நடாத்த எதிரி நினைத்தால் பாரிய சேதங்களை அவர்கள் அனுபவிக்க வேண்டிவரும்.

நாம் எமது பலத்தை அரசு மீது பயன்படுத்துவோம்.

எனவே இன்று தமிழீழத்தை அமைக்கின்ற காலம் நெருங்கிவிட்டது. தேசியத் தலைவருடன் கைகோர்த்து நின்று எமது உரிமையை வென்றெடுப்போம். அதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றார். (க)

# அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் தொழிற் கல்வியை விஸ்தரிப்பதற்காகவும் ஆசிய அபிவிருத்தி வங்கி 70 மில்லியன் டொலர்களை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகள் மேம்படுத்தப்படவுள்ளது.

இதன் காரணமாக நகர்ப் புறங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், நகர்ப்புற சேவைக்கான முகாமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உடன்படிக்கை ஒன்றில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு கைச்சாத்திட்டுள்ளது. (க-39)

# மாத்தளையில் மண்சரிவு அபாயம்!

## 500இற்கும் அதிகமான வீடுகளில் வெடிப்பு

(மாத்தளை)

மாத்தளை மாவட்டத்தில் மண்சரிவு மற்றும் பல வீடுகளிலும் தரையிலும் பாரியளவில் வெடிப்புகள் ஏற்பட்டு வருகின்றமை தேசிய கட்டட நிர்மாண ஆய்வு மைய நிபுணர்களும் மண்ணியல் நிபுணர்களும் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மாத்தளை மாவட்டத்தில் பெய்யும் தொடர்மழையினால் லக்கல, எட்டாவிம்வல, ரணமுரே, அலுத்வத்தாகந்த போன்ற பகுதிகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மாத்தளை, உக்குவளை, இரத்தோட்டை போன்ற பிரதேசங்களில் சுமார் 500இற்கும் அதிகமான வீடுகளிலும் தரையிலும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் நிலத்துக்கு அடியில் உள்ள சுண்ணாம்புக்கல் படுக்கைகள் சேற்றுடன் நீரில் கரைந்து விடுவதால் அப்பகுதியில் குகை போன்ற இடைவெளிகள் ஏற்பட்டு வருவதாலும், மாணிக்கக் கல் அகழ்வதற்காக தோண்டப்படும் குழிகள் முறையாக மூடப்படாமையினாலுமே இத்தகைய வெடிப்புகள் ஏற்படுகின்றதாக மண்ணியல் ஆய்வுமைய நிபுணர் கே.என்.பண்டார தெரிவித்துள்ளார். (க)

# மாணவரின் திறமையை வெளிப்படுத்த சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட 8 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள், கணனிகள், அலுமாரிகள் போன்ற பொருட்கள் தென்மராட்சி வலயத்தினூடாக வழங்கப்பட்டுள்ளன.

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், மீசாலை கமலாசினி மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நாவற்குழி மகாவித்தியாலயம் ஆகிய 8 பாடசாலைகளுமே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சிறுவர்களின் திறனை வளர்த்து சித்திரம் வரைதல், சிறுவர்கள் தமது ஆக்கத்தை வளர்த்து பாடசாலை சுற்றாடலை அழகுபடுத்தல், மகிழ்ச்சிகரமான சுற்றாடலை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையிலேயே இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-108)

# கொழும்பில் உள்ள பாடசாலைகளுக்குள் புலிகள் ஊடுருவியுள்ளதாக வதந்தி!

## குண்டுகள் வைத்திருப்பதாகவும் புரளி!

(கொழும்பு)

கொழும்பில் சில பகுதிகளில் குண்டுகள் வைத்துள்ளதாகவும், பிரபல பாடசாலைகளுக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளதாகவும் வதந்திகள் பரப்பப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் 'வனாத்தமுல்ல' றோமன் கத்தோலிக்க பாடசாலை உள்ளிட்ட பிரபல பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டதாம்.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் உட்தலவின்ன படுகொலை வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்துக்குள் வெடி குண்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் புரளி நிலவியதாகவும் இதனால் அவ்வழக்கின் தீர்ப்பை அவதானிப்பதற்காக நீதிமன்றுக்கு சமுகமளித்த சட்டத்தரணிகள் பொது மக்கள் சட்ட மாணவர்கள், நீதிமன்ற அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் பெரும் பதற்றத்துக்குள்ளாகி நீதிமன்ற வளாகத்தை விட்டு அவசரம் அவசரமாக வெளியேறினார்கள்.

பொலிஸாரும் படையினரும் நிலைமையைக் கட்டுப்படுத்த பெரும்பாடுபட்டனர்.

அத்துடன் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அவர்கள் குண்டை கண்டுபிடிக்க தீவிர முயற்சி எடுத்தபோதும் குண்டு எதுவும் அங்கு இருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்பட்டால் பிரச்சினை உருவாகும் – பவ்ரல் எச்சரிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பிற்போடப்பட்டால் பல பிரச்சினைகள் உருவாகுமென்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது 2005 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலின் பிரகாரம் வாக்குப்பதிவுகளை நிறுத்த முடியாமல் போனால் 2004ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் மேலும் 5 வருடங்களுக்கு வாக்களிக்க முடியாதநிலை ஏற்படுமென்று பவ்ரல் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்களுக்கு 25 வருடங்களாக வாக்களிக்கும் உரிமை கிடைக்காது இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயங்கள் உட்பட தேர்தல்களுடன் தொடர்புடைய பல விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சவார்த்தை நடத்த ஆலோசித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# வீதி சேதமடைந்துள்ளதால் நோயாளர்கள் பெரும் சிரமம்!

## சங்கானை வைத்தியசாலை பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு- சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் வைத்தியசாலை வீதி சேதமடைந்துள்ளதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளவதாகவும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கலாநிதி ஈ.செல்வநாயகம் கவலை தெரிவிக்கின்றார்.

கடந்த வருடம் மட்டும் மேற்படி வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சுமார் 60 ஆயிரத்து 198 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்நிலையில் நீண்ட நாட்களாக இவ் வைத்தியசாலை வீதி செப்பனிடப்படாது பாரிய குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் போக்குவரத்தின் போது நோயாளர்கள் பெரும் அவஸ்தைப் படுகின்றனர்.

இவ்வாறு அதிகரிக்கும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப வைத்திய அபிவிருத்தித் தேவைகள் சிலவும் அதிகரிக்கப்படவேண்டியுள்ளன.

இதேசமயம் உயிர்க்காப்பு வாகனங்கள் மூலம் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளரை அனுப்பி வைக்கும்போதும் இவ் வீதியையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

இவ்வீதியின் சீரற்ற நிலை குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து வீதியைப் புனரமைக்கும்படி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (க)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

26 மீள்பார்வை



டைரக்டர் கிருஷ்ணன், பஞ்சு அவர்களுடன்...

சவுண்ட் இன்ஜினியரையும், டைரக்டரையும் விடுங்கள். திரைப்படத்துறையில் பெரிய மேதையான ஏ.வி.எம். செட்டியார் அவர்கள் என்னைப் போல் ஆயிரம் கலைஞர்களை உண்டாக்கியவர். அவரே ஏம்பா இந்தப் புதுப்பையனைப் போட்டு விஷப்பரீட்சை செய்கிறீர்கள். கே.ஆர்.ராமசாமி அல்லது டி.ஆர் மகாலிங்கம் போன்றவர்களை நடிக்கச் சொல்லி படத்தை முடியுங்கள் என்று சொல்லியிருக்கிறார் .நான் இதை தவறாகச் சொல்லவில்லை. என் வாழ்க்கையைச் சொல்லும் போது உண்மையைச் சொல்ல வேண்டுமல்லவா?

இந்த பராசக்தி படத்தில் எனக்கு வித்தியாசமான வேஷம் மிகவும் கஷ்டப்பட்டு நடிக்க வேண்டும், வசனம் பேசவேண்டும். டி.ஆர்.மகாலிங்கம் கே.ஆர் ராமசாமி போன்றவர்களுக்கு நன்றாக பாடத் தெரியும். பழக்கமானவர்கள் என்ற காரணத்தினால் ஏ.வி.எம். அவர்கள்-அப்படி சொன்னார்.

அதே ஏ.வி.எம். பிற்காலத்தில் அந்த நாள் படம் எடுக்கும் போது ஏம்பா மற்றவர்களைப் போட்டு விஷப் பரீட்சை செய்கிறீர்கள்? சிவாஜியை வைத்து எடுங்கள் என்றார். ஏ.வி.எம். செட்டியார் அவர்கள் இந்த நிகழ்ச்சியை அவரது வாழ்க்கைப் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

பராசக்தி படத்தின் போது சிவாஜியின் நடிப்புத்திறமை பற்றி தெரியாது. அதனால் அப்படிக் கூறினேன் . இப்பொழுது தெரிந்துகொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளார். அது அவர் பெருந்தன்மை.



டி.எஸ்.துரைராஜ்,ஜெமினிகணேசன், நடராஜன், எஸ்.வி. சுப்பையா, டி.கே. சண்முகம் ஆகியோருடன்...

"பராசக்தி" படப்பிடிப்புக்காக நான் ஏ.வி.எம். ஸ்டூடியோவிற்கு வரும் பொழுது எல்லோரும் என்னை விமர்சிப்பார்கள்.

டைரக்டர் ஒரு பக்கத்தில் கேலி செய்வார். அங்குள்ளவர்கள் பலர் என்னைக் கேலி செய்வார்கள். முன்பெல்லாம் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு ரூமில் உட்கார்ந்திருப்பார்கள். ஸ்டூடியோவில் டைரக்டர் மற்றும் பல பேர் இருப்பார்கள். தயாரிப்பாளருக்கு பக்கத்தில் அவருக்கு கைத்தடியாக நான்கு பேர் எப்போதும் இருப்பார்கள். ஒருவன் கூறுவான், என்ன இந்தப் பையன் மிக ஒல்லியாக இருக்கிறானே சினிமாவிற்கு ஒத்து வருவானா? என்று. இன்னொருவன், என்ன பெருமாள் முதலியாரே! அந்தப் பையன் முகம் குதிரை மாதிரி இருக்கிறது ஒத்து வருமா? என்பான். கொஞ்சம் எடை அதிகம் ஆகிவிட்டோம். என்றால், என்ன பையன் குண்டாகிவிட்டான்? இன்னெல்லாம் சினிமாவிற்கு ஒத்துவருவானா என்பான் ஒருவன். இதுபோல் அவரைச் சுற்றியுள்ளவர்கள் பலர் பல கேள்விகள் கேட்பார்கள் கேலியும் செய்வார்கள்.

வெளியில் ஒரு சினிமாப் படம் பார்க்கச் சென்றால் கிருஷ்ணன் பஞ்சுவிடம் பையன் தெருத்தெருவாக சுத்துகிறானே சினிமாவில் நடிக்க ஒத்துழைப்பானா? என்று வத்தி வைப்பார்கள்.

நான் இதைக் கேட்டு ஒ... வென்று அழுவேன். ஏ.வி.எம். ஸ்டுடியோவில் நிறைய வேப்பமரங்கள் இருக்கின்றன. அந்த மரங்களெல்லாம் நான் விட்ட கண்ணீரில் தான் வளர்ந்தது. என்று கூறினால் கூடப் போதாது அவ்வளவு கஷ்டப் பட்டேன்.

ஒரு நாள் நான் அழும் போது என்னுடைய தோள்களை தட்டினார் ஒருவர் . திரும்பிப் பார்த்தேன் கிருஷ்ணன் பஞ்சு என்று சொல்ப வர்களில் பெரியவர் கிருஷணன் நின்று கொண்டிருந்தார். என்ன கணேசா கவலைப்படுகி றாயா என்று அவர் என்னைக் கேட்டார். அப்பொழுது எனது பெயர் சிவாஜி கணேசன் கிடையாது வெறும் கணேசன்தான். இதற்குச் சில வருடங்கள் முன்பே சிவாஜிகணேசன் என்று பெரியார் அவர்களிடம் பட்டம் பெற்ருந்தாலும் படத்தின் டைட்டில் கார்டில் கூட சிவாஜி கணேசன் என்று போடவில்லை. கணேசா கவலைப் படாதே! இதெல்லாம் இத்துறைக்கு வரும் புதியவர்களுக்கு ஏற்படும் சோதனைதான். என்று சமாதானம் சொன்னார் டைரக்கடர் கிருஷ்ணன்.



எஸ்.வி.சகஸ்ரநாமம், சிவாஜி, எஸ்.எஸ். ராஜேந்திரன் பராசக்தி படத்தில்....

அப்பொதெல்லாம் சினிமாத்துறை ஒரு அயர்ன் கர்ட்டன் மாதிரி இருந்தது. யாரும் சுலபமாக நுழைய முடியாது ஆகையால் ஓல்டு பேண்டிகுட் (Old bandicoot) என்று சொல்லுவார்களே... அதாவது பழம் பெருச்சாளிகள் அவர்கள் தான் அங்கு இருக்க முடியும்.

இப்பொழுது ஈஸியாக சினிமா கம்பெனி உள்ளே போகிறார்கள் வருகிறார்கள். பொது வழி மாதிரி ஆகிவிட்டது. ஆனால் அந்தக் காலத்தில் அப்படிக் கிடையாது. உள்ளே நுழைவது என்பது மிகவும் கடினம். நான் எப்படியோ உள்ளே நுழைந்துவிட்டேன். இது அதிகம் பேருக்கு பிடிக்கவில்லையோ? இல்லை நான் பேசுகிற நடை பாவனைகள் புரியவில்லையோ? தெரியவில்லை.

முதலில் கஷ்டமாகத்தான் இருக்கும் கஷ்டப்பட்டு இந்தப் படத்தை முடி. இந்தப் படம் உனக்கு நன்றாக வந்து கண்டிப்பாக வெற்றி பெறுவாய் .அதன் பிறகு சினிமாக்காரர்கள் எல்லோரும் உன் பின்னால்தான் என்று டைரக்டர் கிருஷ்ணன் கூறினார். அந்தத் தெய்வம் சொன்ன வார்த்தை பிற்காலத்தில் உண்மையாகிவிட்டது. ஆகவே சில பேர்தான் பெரியவர்கள் வயதானவர்களெல்லாம் பெரியவர்களா? இல்லை. யார் நல்ல வர்த்தை சொல்லுகிறார்களோ அவர்கள்தான் பெரியவர்கள். அந்தப் பெரியவர்தான் கிருஷ்ணன் அண்ணன் அவர்கள்.பராசக்தி படம் எடுப்பதற்கு இரண்டு வருஷம் ஆனது. அந்தப் படத்தில் என்னோடு எஸ்.வி. சகஸ்ர நாமம் , எஸ்.எஸ். ராஜேந்திரன், வி.கே. ராமசாமி , ரஞ்சனி, பண்டரிபாய் ஆகியோர் நடித் தார்கள்.

## என்னை வாழ வைத்த தெய்வம்

டி.எஸ்.என்: அந்தக் கால கட்டத்தில் உங்களை இப்படி பலர் விமர்சனம் செய்துக்கொண்டிருந்தபோது பி.ஏ. பெருமாள் அவர்கள் உங்களை அந்த படத்தில் இருந்து நீக்கவேண்டும் என்று எப்பொழுதாவது எண்ணினாரா?

சிவாஜி: இவ்வளவு தூரம் என்னைப் பலர் அவமானம் செய்து பி.ஏ.பி.யிடம் சொல்லி என்னை மாற்றும் படி வற்புறுத்தினார்கள். என்னை வாழ வைத்த தெய்வமாகிய அவர் மட்டும் இந்த விமர்சனங்கள் எதற்கும் செவிசாய்க்கவில்லை. (தொடரும்)

# விசாரணைகளை ஆரம்பிக்கக் கோரி 4 தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்த காத்திரமான நடவடிக்கைகளை எடுக்குமாறும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை உட்பட அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டமை குறித்து உரிய விசாரணைகளை நடத்துமாறும் கோரி நான்கு தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

உடனடியாக வன்முறைகளைக் கட்டுப்படுத்தி படுகொலைகள் குறித்து உரிய விசாரணைகளை நடத்த வேண்டும். அது தவறும் பட்சத்தில் போராட்டத்தினை தொடர வேண்டிய நிலை ஏற்படுமென்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் , மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஆகியோர் கையொப்பமிட்டு இக் கடிதத்தினை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# 28 துவிச்சக்கர வண்டிகளை—— படையினர் மக்களுக்கு வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு யாழ்.பாதுகாப்பு படைத்தளபதியின் ஆலோசனைக்கு அமைய 28கீரோ ரக துவிச்சக்கரவண்டிகள் படையினரால் வழங்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பத்தினருக்கே துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

கடந்த 2ஆம் திகதியும், 17 ஆம் திகதியும் கற்கோவளம் பகுதியில் வைத்து வழங்கப்பட்ட இத் துவிச்சக்கர வண்டிகள் கொழும்பில் உள்ள நன்கொடை நிறுவனத்தினால் அப்பகுதியில் உள்ள இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டதெனவும் அவர்கள் அவற்றை பொதுமக்களுக்கு வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (க)

# திருமலையில் மூன்று—— தமிழ் இளைஞர்கள் கைது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் ஈச்சிலம்பற்று, இலங்கைத் துறை பகுதியில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான தோப்பூர் பட்டியடிக்கு இளைஞர்கள் மூவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. கணேசமூர்த்தி நாகராசா, தம்பிநாதன் இலகேஸ்வரன், பாக்கியதுரை திலீபன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது பற்றிய விபரங்கள் தெரியவில்லை எனவும் இதனால் இவர்களின் உறவினர்கள் பெரும் வேதனையுடன் அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# பேரூந்து நிலையம் இன்று திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை யால் அமைக்கப்பட்ட கொடிகாமம் மத்திய பேரூந்து நிலையம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மக்களின் பாவனைக் காக திறக்கப்படவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் கு.க.பாலச்சந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேஸும் ,சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதேச சபையின் உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், தென் மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், உதவி உள்ளூராட்சி ஆணை யாளர் க. இராசையா, வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் எஸ். கணேசபிள்ளை ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (து-21)

# கே.கே.சுப்பிரமணியத்துக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பிரபல தமிழ் அறிரும் சைவத் தொண்டருமான கே.கே. சுப்பிர மணியத்தின் சைவத்தமிழ் பணியை பாராட்டி திருவாவடுதுறை மகா சந்நிதானம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி வெள்ளிக் கிழமை திருவாவடுதுறையில் அன்னாருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர்.

அக்கௌரவிப்பு நிகழ்வில் மற்றும் பல துறைசார் அறிஞர்களும் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள். திருவாவடுதுறை மகாசந்நிதானத்தால் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ள கே.கே. சுப்பிரமணியத்தினுடனான பேட்டி இன்றிரவு 10.15 மணிக்கு இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படவுள்ளது. (து)

# நளினி முருகனுடன் மகள் சந்திப்பு

(கொழும்பு)

வேலூர் மத்திய சிறையில் உள்ள ராஜீவ் கொலையுடன் சம்பந்தப்பட்ட கைதிகளாக நளினி மற்றும் முருகனை அவர்களின் மகள் மேகரா கடந்த வியாழக்கிழமை சந்தித்தார்.அவருடன் உறவினர்கள் பத்மா,கோகிலா ஆகியோரும் சென்றிருந்தனர்.

கடந்த 10ஆம் திகதி முதன் முறையாக இருவரையும் மேகரா சந்தித்தார். பெண்கள் சிறையில் உள்ள நளனியையும், ஆண்கள் சிறையில் உள்ள முருகனையும் மேகரா சந்தித்துப் பேசுவது இது மூன்றாவது முறையாகும். (க)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

INTERNATIONAL CRICKET COUNCIL

15

## டெஸ்ட் போட்டி - இணைப்பாட்டம்

டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் 1781 போட்டி நடந்து முடிந்துள்ளது.

இந்திய- பாகிஸ்தான் அணிகளுக் கிடையில் லாகூரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியே அப்போட்டியாகும்.

1877ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய- இங்கிலாந்து அணிகளுக்கிடையில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றது.

அன்றுதொட்டு அதாவது 129 வருட காலத்தில் பல்வேறு விதமாக உலக சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் இதுவரை காலமும் இடம்பெற்ற சாதனைகளைத் தந்திருந்தோம்.

'இருபத்திரண்டு முட்டாள்கள் விளையாட இருபத்திரண்டாயிரம் முட்டாள்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்' என சிலர் கிரிக்கெற் போட்டியினை வர்ணித்தார்களாம். அவர்கள் வர்ணித்ததில் தவறேதும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஐந்து நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டி ஆமை வேகத்தில் நகர்கின்றது. ஒரு சோம்பேறித்தனமாக இது விளையாடப்படுகின்றது. ஐந்து நாட்களுக்கு நீளும் ஆட்டமாதலால் துடுப்பாட்டக்காரர்கள் மந்தகதியிலேயே ஓட்டங்களைக் குவிக்கின்றார்கள்.

இருந்தும் இப்போட்டியிலும் பல சாதனைகள் படைக்கப்படுகின்றன. அவ்வகையில் துடுப்பாட்டம் பந்துவீச்சு என்பவற்றை விரிவாகத் தந்திருந்தும் அவ்வரிசையில் இவ்வாரம் இணைப்பாட்ட சாதனையைத் தருகின்றோம்.

1990/91ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக்கெதிராக வெலிங்ரனில் நியூஸிலாந்து அணியின் அன்றூ ஜோன்ஸ் மற்றும் மார்ட்டின் குரே இணை மூன்றாவது விக்கெற்றுக்காகப் பெற்ற 467 என்பதே 1997ஆம் ஆண்டு வரை சாதனையாக இருந்தது.

1997ஆம் ஆண்டு இந்திய அணிக்கெதிராக இலங்கையணியின் மகாநாம மற்றும் ஜெயசூரிய இருவரும் இரண்டாவது விக்கெற் இணைப்பாட்டமாக 576 ஓட்டங்களைப் பெற்றனர். இச்சாதனை கடந்த 9 வருடங்களாக முறியடிக்கப்படாமல் உள்ளது.

**இவர்களுமா? (இலங்கையணி)...**

பலம் மிக்க அணிகளையெல்லாம் சில காலமாக கலங்க வைத்தது இலங்கையணி.

இலங்கையணியின் வீரர்களால் நிலைநாட்டப்பட்ட இம்மாபெரும் இணைப்பாட்டச் சாதனையினை யாரும் எளிதில் மறந்து விடமாட்டார்கள்.

1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி கொழும்பின் பிரேமதாஸ விளையாட்டரங்கு. ஆயிரக்கணக்கான இரசிகர்கள். ஆம்! இலங்கை- இந்திய அணிகளுக்கிடையில் டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி இலங்கையணிக்கு இமாலய இலக்கை நிர்ணயித்தது. எட்டு விக்கெற் இழப்பிற்கு 537 ஓட்டங்கள். இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர் 143ஓட்டங்கள், முஹமட் அஸாருதின் 126 ஓட்டங்கள், சித்து 111 ஓட்டங்கள் ஆகியோர் தமது பங்கிற்கு சதங்களைப் பெற்றனர்.

முதல்வருடத்தில் உலகக்கிண்ணத்தை வென்ற இலங்கையணி. இது அவர்களுக்கு பெரும் எண்ணிக்கையாக இருப்பதற்கு சாத்தியக்கூறுகள் குறைவாக இருந்திருக்கலாம்.

ஆனால் ஐந்நூறைத் தாண்டி ஓட்டங்களைப் பெறுவதென்பது இலகுவான காரியமா என்ன?

அவ்வகையில், ஒரு பெருஞ் சவாலுக்கு எதிராக விளையாடத் தொடங்கினர் இலங்கையணியினர். அணி 39 என்ற சொற்ப ஓட்ட எண்ணிக்கையிலேயே தன் முதல் விக்கெற்றினை இழந்தது.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் குல்கர்னி வீசிய முதற்பந்திலேயே தனது விக்கெற்றினைப் பறிகொடுத்தார் மார்வன் அத்தப்பத்து.

குல்கர்னிக்கு இது முதல்டெஸ்ட் போட்டி என்பதால் முதல் டெஸ்டின் முதல் பந்திலேயே முதல் விக்கெற்றினை வீழ்த்திய முதல் இந்தியர் என்ற பெருமையுடன் டெஸ்ட் வரலாற்றில் 12ஆவது வீரராக இடம்பெற்றார்.

மார்வனுக்குப் பதிலாக களம் புகுந்தார் றொசான் மகாநாம. ஜெயசூர்யாவுடன் இணைந்து சாதனைப் பயணத்தினை ஆரம்பித்தனர்.

ஜெயசூர்யா- மகாநாம இணை இந்தியப் பந்து வீச்சாளர்களைத் தவிடுபொடியாக்கியது. இருவரும் இணைந்து இரண்டாவது விக்கெற் இணைப்பாட்டமாக 576 ஓட்டங்களைப் பகிர்ந்து சாதனை நிலைநாட்டினார்.

இரண்டு நாட்களுக்கு மேலாக இருவரும் ஆடினர். இதேவேளை, அணியின் ஓட்ட எண்ணிக்கை 615ஆக இருக்கையில் அனில் கும்ளேயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் மகாநாம. அத்துடன் 576 ஓட்டங்களுடன் இரண்டாவது விக்கெற் இணைப்பாட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இது இவ்வாறிருக்க, இவ்விருவரும் மேலும் இரண்டே இரண்டு ஓட்டங்கள் பெற்றிருந்தால்...

துடுப்பாட்ட வரலாற்றிலேயே மாபெரும் சாதனையைப் பெற்றிருக்கலாம். ஏனெனில் 1946/47 காலப்பகுதியில் நடைபெற்ற ரஞ்சித் கிண்ணத்துக்கான (இந்தியா) முதற்தர போட்டியில் விஜய்ஹசாரே (288). குல்முஹமட் (319) ஆகியோர் இணைந்து பெற்ற 577 ஓட்டங்களே உலகின் மாபெரும் இணைப்பாட்டச் சாதனையாகும்.

இதேவேளை, மகாநாம ஆட்டமிழந்த பின் ஜெயசூர்யா மேலும் ஒரு ஓட்டத்தையேனும் பெறவில்லை. 578 பந்துகளை எதிர்கொண்டு 36 நான்குகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 340 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜெயசூர்யா, ராஜேஸ்சௌஹான் வீசிய பந்தினை தடுத்தாட முற்பட்டவேளை சில்லிப் பொயின்ரில் நின்ற கங்குலியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

இப்போட்டியில் தொடர்ந்து வந்த அரவிந்த டி சில்வா (126), அர்ஜுன ரணதுங்க (86), மஹேல ஜெயவர்த்தன (66) ஆகியோர் தமது பங்கிற்கு விளாச இலங்கையணி 6 விக்கெற் இழப்பிற்கு 952 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்தது.

**சிதைந்து போன இந்தியர்களின் கனவு**

முதலாவது விக்கெற்றுக்கான 50 ஆண்டுகால சாதனையை வெறும் 4 ஓட்டங்களால் தவறவிட்டனர் இந்தியர்கள்.

ஆனாலும் அந்த 50 ஆண்டுகால சாதனை இன்னும் இந்தியர்கள் வசம் தானே இருக்கிறது என்று இந்தியர்கள் தம்மைத்தாமே தேற்றிக்கொள்ளலாம்.

இந்திய- பாகிஸ்தான் அணிகளுக் கிடையில் லாகூரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானியர்கள் 7விக்கெற் இழப்பிற்கு 679 ஓட்டங்களைப் பெற்றனர்.

அடுத்துக் களம்புகுந்த இந்திய அணிக்கு ஆரம்பத்திலேயே வீரேந்தர் சேவாக் மற்றும் ராகுல் டிராவிட் இணை சிறப்பான இணைப்பாட்டத்துக்கு வித்திட்டனர்.

**நோயல்**

இவர்கள் இருவரும் இணைந்து 410 ஓட்டங்களைப் பெற்று முதல் விக்கெற்றுக்கு அதிக ஓட்டங்கள் எடுத்த இரண்டாவது ஜோடி என்ற பெருமையினைப் பெற்றனர்.

இன்னும் 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தால் பன்காஜ்ஹோய் மற்றும் வினூமான்ட் இருவரும் பெற்ற 413 ஓட்டங்கள் என்ற 50 ஆண்டுகால சாதனையை சேவாக்- டிராவிட் இணை முறியடித்திருக்கலாம். அது முடியாமல் போனது.

இப்போட்டியில் சேவாக் 250 ஓட்டங்களையும் டிராவிட் 128 ஓட்டங்களையும் பெற்றனர்.

(அடுத்தவாரம் தொடரும்...)

## இணைப்பாட்டச் சாதனைகள்

| இணை | ஓட்டம் | வீரர்கள் | நாடு | எதிராக | மைதானம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| 1st | 413 | பன்காஜ் றோய் & வினூமான்காட் | இந்தியா | நியூசிலாந்து | சென்னை | 1955/56 |
| 2nd | 576 | றொசான் மகாநாம & சனத் ஜெயசூர்யா | இலங்கை | இந்தியா | கொழும்பு | 1997 |
| 3rd | 467 | மார்ட்டீன் குரே & அன்றூ ஜோன்ஸ் | நியூஸிலாந்து | இலங்கை | வெலிங்ரன் | 1990/91 |
| 4th | 411 | பீற்றர் மே & கொலின் கொட்றி | இங்கிலாந்து | மேற்கிந்தியா | விர்மிங்கம் | 1957 |
| 5th | 405 | டொன் பிரட்மன் & எஸ்.பார்னஸ் | அவுஸ்திரேலியா | இங்கிலாந்து | சிட்னி | 1946/47 |
| 6th | 346 | டொன்பிரட்மன் & பிங்கிளேட்டன் | அவுஸ்திரேலியா | இங்கிலாந்து | மெல்போர்ண் | 1936/37 |
| 7th | 347 | அற்கின்ஸன் & டிப்பெஷா | மேற்கிந்தியா | அவுஸ்திரேலியா | பிறிஜ்ரவுண் | 1954/55 |
| 8th | 313 | சக்லெய்ன் முஷ்தாக் & வஸீம் அக்ரம் | பாகிஸ்தான் | சிம்பாப்வே | செய்க்குபுநா | 1996/97 |
| 9th | 195 | மார்க் பௌச்சர் & சிம்கொக் | தென்ஆபிரிக்கா | பாகிஸ்தான் | ஜொனெஸ் பார்க் | 1997/98 |
| 10th | 151 | ஹாஸ்ரிங்ஸ் & கொலிங் | நியூசிலாந்து | பாகிஸ்தான் | ஒக்லாண்ட் | 1972/73 |
|  | 151 | முஷ்தாக் அஹமட் & அஷார் முஹமட் | பாகிஸ்தான் | தென்ஆபிரிக்கா | ராவல்பிண்டி | 1997/98 |

## கட்டப்பிராய் பகுதியில் கிளைமோர் குண்டு மீட்பு!

(கல்வியங்காடு)

கல்வியங்காடு கட்டப்பிராய் சந்திக்கு இடையில் உள்ள வண்ணான் குளத்திற்கு அருகாமையிலுள்ள பற்றைக்குள் நேற்று முன்தினம் கிளைமோர் குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 8.00 மணிக்கு இராணுவத்தினர் வழமையான ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டு தேடுதலில் ஈடுபட்டபோது வீதியோரமாகவுள்ள பற்றைக்குள் இக்கிளைமோர் குண்டு மீட்கப்பட்டது.

இதையடுத்து அந்தப் பகுதியூடான போக்குவரத்துக்கள் சிறிதுநேரம் தடைப்பட்டது.

இக் கிளைமோர்க் குண்டை குண்டு செயலிழக்கும் பிரிவினர் பற்றைக்குள்ளே வைத்து வெடிக்க வைத்தனர். (க-74)

## தரம்-8 இற்குரிய பாடநூல்கள் வந்து சேரவில்லையாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு தரம் -8ற்குரிய புதிய பாடத்திட்ட தெரிவு பாடநூல்கள் எதுவும் இதுவரை வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற தரம்-8இல் புதிய பாடத்திட்ட கணிதம், தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வில் யாழ்.கல்வி வலயத்தில் இருந்து எடுத்து வாப்பட்ட பாடநூல்களின் நிமற்பிரதி கொப்பிகளை வழங்கியே செயலமர்வு நடை பெற்றதாகவும் கோட்டக்கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 2005ஆம் ஆண்டு தரம் 7ற்கான புதிய பாடத்திட்ட நூல்களான தமிழ், கணிதம் ஆகியன இல்லாமலே அம்மாணவர்கள் 7ஆம் தரத்தை முடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல 2005இல் தரம் 1, 2இற்கான பாடநூல்களும் கிடைக்கவில்லை. (க-108)

கொழும்பில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்ற சுற்றி வளைப்பு மற்றும் கைது நடவடிக்கைகளுக்கு தமது கடுமையான எதிர்ப்பை தெரிவிக்கும் நோக்கில் மேல் மாகாண மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கொழும்பு ஐந்திலாம்புச்சந்தியில் கடந்த 6ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் பங்கு பற்றி தமது எதிர்ப்பை தெரிவித்தன. புதுவருடத்தினை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு அன்றைய இரவில் சோதனை நடவடிக்கைகளால் ஏற்பட்ட பாதிப்புக்கள் வகை தொகையின்றி கைது செய்யும் அரசாங்கத்துக்கு தெளிவாகக்காட்டியுள்ளோம் என்பதை சொல்ல விரும்புகின்றோம். அந்த எதிர்ப்பைக் காட்டாமல் விட்டால் கடைசியில் தலைநகரத்தில் அதாவது கொழும்பில் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் நடக்க முடியாத நிலை ஏற்படும். அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

**சிரிதுங்க ஜெயசூரிய**

**ஜனாதிபதி வேட்பாளர்**

**புதிய இடதுசாரி முன்னணி**

எங்களுக்கு தெரிகிறது புது வருட ஆரம்பத்தோடு யாழ்ப்பாணத்தில் கொலைகள், அப்பாவி இளைஞர்கள், மாணவர்கள் கொலைகள் இது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. அது மாத்திரமல்லாமல் கொழும்பிலும் சரி ஏனைய பிரதேசங்களிலும் சரி ஆயிரக்கணக்கான கைதுகள் இடம் பெற்றுள்ளன. இவை எல்லாவற்றுக்கும் பின்னால் இருந்து புத்த பிக்குகளும், ஜேவிபியும் ஆலோசனைகள் கூறிக் கொண்டிருப்பதையும் நாங்கள் பார்க்க கூடியதாக இருக்கின்றது. தென்னாபிரிக்காவில் இருக்கின்ற இன ஒடுக்குமுறை, பலஸ்தீனத்தில் இருக்கின்ற இன ஒடுக்கு முறை போன்றுதான் இங்கும்

# தமிழர் மீதான அடக்கு முறையை நிறுத்தவும்! கட்சிகளும் அமைப்புகளும் எழுப்பிய குரல்



குறித்தும் பொலிஸ் நிலையங்களில் ஏற்பட்ட கெடுபிடிகள் பிரச்சனைகள் குறித்தும் தாம் பலத்த கண்டனத்தை தெரிவிப்பதாக ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றியோர் குறிப்பிட்டனர். இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தமது கருத்தினை இவ்வாறு தெரிவித்தார்கள்.

**மனோ கணேசன்**

**தலைவர் - மேல் மக்கள் முன்னணி**

கொழும்புப்பிரதேசத்திலே இந்த மத்திய பகுதியிலே நாங்கள் இன்று பல்வேறு தமிழ் கட்சிகள், முற்போக்குக்கட்சிகள், தொழிற் சங்கங்கள் இந்த இடத்திலே ஒன்று சேர்ந்து எங்களது உறுதியான சாத்வீக எதிர்ப்பை இந்த கொழும்பு மாநகரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அப்பாவித்தமிழ் மக்களை தெற்கில் அரசாங்கம் பாரிய யுத்த ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. அதற்காக கொழும்பில் விசேட அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பாவி தமிழ் பொதுமக்களை தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளியுள்ளனர். அவர்களை பீதியடையச் செய்துள்ளனர்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

**பாராளுமன்ற உறுப்பினர்**

**தமிழ் தேசிய கூட்டமைப்பு**

இன்று நீங்கள் பார்த்தீர்களேயானால் வடகிழக்கை மாத்திரமல்ல ஒட்டுமொத்தமான இலங்கையையும் யுத்தத்தை நோக்கி அரசாங்கம் தள்ளிக்கொண்டு செல்வதை நாங்கள் பார்க்க கூடியதாக இருக்கின்றது. திருகோணமலையில் கொலைகள், தமிழர்கள் இடம்பெற்றுள்ளது. அதுவும் 31ம் திகதி இரவு அவர்கள் புதுவருடத்தை கொண்டாட இருந்த நிலையில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தெரிந்தெடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

**எஸ். மனோன்மணி**

தமிழ் மக்களான எங்களுக்கு கொழும்பில் வாழமுடியாதுள்ளது. வீட்டில் இருந்தவர்களைக் கூட அடையாள அட்டை மற்றும் பல காரணங்களைக்கூறி எங்களை உடுத்த உடையுடன் பிடித்துச் சென்றார்கள். இதுவே இந்த ஆர்ப்பாட்டத்திற்கு முக்கிய காரணமாகும்.

**முஜீபுர் ரஹ்மான்**

**பொதுச்செயலாளர்**

**முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி**

இந்த பகுதி இந்த நகரம் தமிழ் பேசும் மக்களின் நகரம். இந்த நகரத்தை சமாதானத்தின் நகராக ஆக்கி இந்த நகரத்துக்குள் இருக்கின்ற இனவாதிகள், அடிப்படைவாதிகளை தோற்கடித்து அவர்களை இந்த நகரத்தில் இருந்து வெளியேற்றி இந்த நாட்டின் இன ஒற்றுமையை கட்டியெழுப்ப இந்த நகரத்தில் இருந்து தொடங்குவோம் என்று எல்லோரிடமும் வேண்டிக்கொள்கிறோம். இதனையே இந்த நகரத்தில் இருக்கின்ற நாங்கள் எல்லா இனங்களுக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் சொல்கிறோம். இவ்வாறு கலந்து கொண்டவர்களின் கருத்துகள் அமைந்திருந்தன. நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் கண்ணியம், உரிமை, சுதந்திரம் என்பவற்றை பாதுகாப்பது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். அந்த வகையில் சட்டத்தை நிலைநாட்டும் நடவடிக்கைகள் அப்பாவி பொதுமக்களுக்கு துன்பமானதாக அமைவதையோ, அவர்களின் சுதந்திரம், வாழும் உரிமை, பாதுகாப்பு என்பவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதையோ எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. என்பதையே தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் என சகலரும் ஒன்று கூடி நடத்திய இந்த ஆர்ப்பாட்டங்கள் கூறி நிற்கின்றன.

- உசாமா

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

### உறுப்புரை - 13

1. ஒவ்வொரு நாட்டினதும் எல்லைக்குள் சுதந்திரமாக பிரயாணஞ்செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.
2. தனது சொந்த நாடு உட்பட ஏதேனும் நாட்டை விட்டு செல்லவும் தத்தமது நாட்டுக்கு திரும்பவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## கருத்தாடல் களம்

### போருக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும்

தற்போது வன்முறைகள் தொடர்வதற்கு காரணம் அரசாங்கத்தின் செயற்பாடுகளே. பொங்குதமிழ் நிகழ்வில் ஈடுபட்டமைக்காக இரு தமிழ் இளைஞர்கள் நீர்வேலியில் இராணுவத்தால் சுட்டு கொல்லப்பட்டதன் பின்னரே இந்த வன்முறைகள் ஆரம்பித்தன. அதேபோல புங்குடுதீவு பாலியல் வல்லுறவு சம்பவமும், திருமலையில் மாணவர்கள் ஐவர் சுட்டு கொல்லப்பட்டமையும் கடற்படை மீதான தாக்குதல்களுக்கு காரணமாக அமைந்துள்ளன என்பதை சகலரும் அறிவர். எனவே போரை தவிர்ப்பது என்பது அரச படைகளை அரசாங்கம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலேயே தங்கியுள்ளது.

சஜீவன் கந்தசாமி - சாவச்சேரி

### வன்முறைகளின் பின்னணியில் புலிகளே இருக்கிறார்கள்

சமாதானமாக இருந்த நாட்டுச்சூழலை குழப்பியவர்கள் புலிகளே. புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்தி நாட்டில் அமைதியை ஏற்படுத்தியவர் ரணில் விக்கிரமசிங்கவே. அவரை ஜனாதிபதி யாக்குவதன் மூலம் நிரந்தர தீர்வு கிடைக்கும், போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என எதிர்பார்த்து நம்பிக்கையுடன் தமிழ் மக்கள் இருந்தனர். ஆனால் புலிகள் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியதன் மூலம் அவர்களுக்கு சமாதானம் தேவையில்லை. கொடிய யுத்தமே தேவையென்பதை மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியுள்ளனர். எனவே இந்த வன்முறைகளின் பின்னணியில் புலிகளே இருக்கிறார்கள்.

ஆர்.பிரதாபன் - திருகோணமலை

## பொய்யோ?

விழுகின்ற மழைக்கு
மதிப்புண்டு
விழுகின்ற இலைக்கு
பலனுண்டு
விழுகின்ற மலருக்கு
விதையுண்டு
விழுகின்ற உயிருக்கு
எது உண்டு

துப்பாக்கிகளும்
கொலை வெறியும்
மென்று சுவைத்து துப்ப
மௌனத்துடன்
சர்வதேசம் பார்த்திருக்கிறது

உலகில் நீதி
உண்டென்பது பொய்யோ...?

- என். ஜீவேந்திரன்

## இவ்வார விழிப்பில்.

- அடக்குமுறைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டம்
- யுத்த பீதியுடன் யாழ். விவசாயம்
- அரசியல்வாதிகளுக்கான பயிற்சிப்பட்டறை
- மேல் கொத்மலை திட்டமும் தமிழர்களும்

## சிறாரின் சமாதான கோரிக்கை

நாட்டின் சமாதானம் கேள்விக் குறியாகியுள்ளது. குண்டுவெடிப்புக்களும், தாக்குதல்களும் ஊடகங்களின் நாளாந்த செய்திகளாகி விட்டன. இந்த சூழல் படிப்படியாக தலைநகரையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளது. 2001ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட இறுக்கமான சூழ்நிலையை மீண்டும் கொழும்பில் காணக்கூடியதாக இருக்கிறது. சுற்றி வளைப்பு, கைதுகள், தடுப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். குற்ற செயல்களையும், அசம்பாவிதங்களையும் தடுக்கும் நோக்கிலேயே இந்நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக கூறினாலும் இது கொழும்பில் வாழ்கின்ற தமிழ் மக்களை பெரும் பீதிக்குள்ளும், கஷ்டத்திற்குள்ளும் தள்ளியுள்ளது. இந்த நிலையில் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் கடந்த 6 ஆம் திகதி காலையில் ஒன்று திரண்ட சிறுவர்கள் குழுவொன்று இந்நாட்டின் ஆட்சியாளர்களுக்கு மிக முக்கியமான செய்தியை முன்வைத்தனர்.




தெற்கை சேர்ந்த இச்சிறுவர்கள் தங்களைப் போன்ற ஏராளமான சிறுவர்களையும் அதே நேரம் நாட்டையும் அழிவுக்குள்ளாக்கிய யுத்தம் மீண்டும் ஏற்படாமல் சமாதான பேச்சுக்களை முன்னெடுத்து தமது எதிர்காலத்தை பாதுகாக்குமாறு மிகவும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட சிறாரின் சில கருத்துக்கள் இவை.

**சச்சிகாடில்ருக்ஷி — வெலிகமை**

இந்த ஆர்ப்பாட்டதிற்கு நாங்கள் வந்ததன் காரணம் நாட்டின் தலைவர்களும், இந்த நாட்டின் அதிகாரிகளும் பிரச்சினையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகும். இப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்று கிடைக்க வேண்டுமென்பதே எமது எதிர் பார்ப்பாகும். அதிகாரிகளிடமும் ஆட்சியாளர்களிடமும் இப் பிரச்சினையை முன்வைத்து அவர்களிடம் இருந்து சிறந்த பதிலொன்றை எதிர் பார்க்கிறோம்.

**டிலினி ரசன்கிகா — வெலிகமை**

உண்மையிலே சமாதானம் என்பது சிறுவர்களை போன்றே பெரியோர்களுக்கும் அவசியமானது. ஆகவே எமது பாடசாலைகளில் இருந்துதான் இந்த சமாதானம் ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது. எமது பெரியோர்களுக்கு மத்தியில் சமாதானத்தை உருவாக்க வேண்டியுள்ளது. சமாதானம் எமது நாட்டுக்கு வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒரு முயற்சியே இது.

- உசாமா

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்முகவரி :- villippu@yatv.net

## விழிப்பின் பதிவுகள்

YATV வலம்புரி

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு **7.25** மணிக்கும் விழிப்பில் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

- திருவள்ளுவர்

வலம்புரி

## செல்வாக்கிற்கு இடம் தராத நீதி பரிபாலனம் தேவை

உடதலவின்ன படுகொலை வழக்கில் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையும் அவரது இரண்டு புதல்வர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஐந்து படையினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி கண்டி உடதலவின்னவில் வானில் சென்ற பத்து முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பொதுத்தேர்தலை அண்மித்த நாளில் நடந்த இப் படுகொலைச் சம்பவம் அப்போது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

சிறுபான்மை இன மக்களுக்கு இருக்கக் கூடிய பாதுகாப்பின் பலவீனம் எத்தகையது என்பதை முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைச் சம்பவம் வெளிக்காட்டியது.

அதேநேரம் இலங்கையில் இருக்கக்கூடிய பிரச்சினை ஆளும் தரப்புக்கும் விடுதலை புலிகளுக்குமானதென்னும் நிலைப்பாட்டிலிருந்த முஸ்லிம் மக்களிடமும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதாவது இலங்கையில் சிறுபான்மை இனம் நசுக்கப்படுகிறதென்ற உண்மையை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பத்து முஸ்லிம் இளைஞர்களினதும் படுகொலைக்குக் காரணம் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையும் அவரது இரு புதல்வர்களும் என்ற குற்றச்சாட்டு பரவலாகப் பேசப்பட்டது.

அது தொடர்பில் கடந்த நான்கு ஆண்டுகளாக் நடந்த விசாரணைகளில் அநுருத்த ரத்வத்தையும் அவரது இரண்டு புதல்வர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நீதிபதி பரிபாலனத்தின் தீர்ப்பு அவர்களுக்கு விடுதலையை அளித்துள்ளது. நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் பற்றிய விமர்சனத்திற்கு இங்கு இடம் இல்லையாயினும் சட்டங்கள் நீதித்துறைகள் எப்போதும் நடுநிலையோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தருவதாக இருத்தல் வேண்டும்.

நீதி பரிபாலனத்தால் சட்டத்தில் செல்வாக்கு கலாசாரம் மேலோங்குமாயின் பக்க சார்புகள் காணப்படுமாயின் அந்த நாட்டில் அநீதியே கோலோச்சும்.

குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதற்கு நீதிபரிபாலன அமைப்புக்கள் உதவுமாயின் அது குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கு மாறாக குற்றச் செயல்களை அதிகரிக்கச்செய்வதாகவே இருக்கும்.

இந்த நாட்டில் இத்தனை தூரம் இனப் பிரச்சினை மேலோங்குவதற்கு தனித்து அரசியலை மட்டும் குறை கூறுவது பொருத்துடையதல்ல.

அரசியல்வாதிகள் ஆட்சிப்பீடங்களில் இருப்பவர்கள் விடுகின்ற தவறுகளை -பிழைகளை தட்டிக்கேட்டு தண்டனை வழங்கும் கடமையை நீதி பரிபாலனங்கள் ஒழுங்காக மேற்கொண்டிருந்தால் மேற்போந்த அபரீதம் ஏற்பட்டிருக்கமாட்டாது.

எனவே பதவி அந்தஸ்து செல்வாக்கு என்பவற்றைக் கடந்தாக நீதியின் தீர்ப்பு அமையவேண்டுமென்பதே நீதியை வேண்டி நிற்பவர்களின் விருப்பாகும்.

# தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**இராணுவத்தினருக்கு அஞ்சி கடந்த இரு வாரங்களில் பெருமளவு அப்பாவித்தமிழ் மக்கள் தென் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். தற்போதைய அரசே இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன.**

வடக்கு-கிழக்கில் தொடரும் வன்முறைகளையடுத்து பெருமளவு தமிழ் மக்கள் தென் இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து வருகின்றமை தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்,

கடந்த இரு வாரங்களாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து அப்பாவித் தமிழ் மக்கள் அகதிகளாக தென் இந்தியாவிற்கு இடம்பெயர்தல் அதிகரித்துவருகின்றது. இது பயங்கரமான நிலைமைக்கான அறிகுறியாகும்.

தமது உயிரைப் பாதுகாப்பதற்கு வேறு வழியில்லாததாலும், யுத்த நிலைமை தோன்றியுள்ளமையாலும் பல நீதிமுறைகள் சட்டநடவடிக்கைகள் மூலம் தமது அத்தியாவசிய தேவைகளான உணவு, மருந்து போன்ற மனித தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாததாலுமே இந்த அப்பாவி மக்கள் தமது சொந்த நாட்டை விட்டு விலகிச் செல்வதற்கு திட்டமிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் மனித வாழ்க்கையை சாதாரண நிலைமக்குக் கொண்டு வருவதற்கென செயற்பட்டுவரும் சர்வதேச சமூகசேவை அமைப்புக்களின் அலுவலகங்கள் மூடப்பட்டு வருகின்றமை தினமும் இடம்பெறும் மனித படுகொலைகளின் அதிகரிப்பு போன்ற விடயங்களால் தமது பாதுகாப்பு தொடர்பான சந்தேகத்திற்குரிய நிலைமை அப்பாவி மக்களிடையே தோன்றுகின்றது. இதனால் அவர்கள் பாதுகாப்பு தேடி ஓடுகின்றனர்.

2001ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி முதன் முறையாக அகதிகள் தொடர்பான அமைச்சரவை ஒன்றை ஸ்தாபித்தது.

அவ்வமைச்சின் மூலம் ஐ.நா. அமைப்பின் கீழ் பல் வேறு நிறுவனங்களில் பல சர்வதேச அமைப்புக்களில் பணவுதவி பெற்று தமிழ்நாட்டு ஆளுமையாளர்களிடம் அவ்வேளை அகதிகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதன்படி தமிழ்நாட்டின் 111 அகதி முகாம்களிலுள்ள 66 ஆயிரம் இலங்கை அகதிகளை அவர்களின் விருப்பின் பேரில் எமது நாட்டிற்கு வர வழைத்து அவர்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்தினர். அப்போது எடுக்கப்பட்ட அந்த நடவடிக்கை இன்று பயனற்றுப் போயுள்ளமை மிகவும் வேதனைக் குரியது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்கள் தமது குடும்பத்துடன் பாதுகாப்பற்ற நிலையில் கடல் மார்க்கமாக தென் இந்தியாவிற்கு இடம்பெயர்தல் வேறு எதுவும் செய்யமுடியாததாலேயாகும் .

இந்நிலைமையால் நாம் பெரும் முயற்சியுடன் தீர்த்த பிரச்சினை மீண்டும் தலை தூக்கியிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இந்த இக்கட்டான சூழலை அரசு உணரவேண்டும். வடக்கு-கிழக்கு அப்பாவித் தமிழ் மக்கள் தமது பாதுகாப்புத் தொடர்பாக நம்பிக்கையான நிலையை உருவாக்குவது அரசாங்கத்தின் கடமையாகும். அவர்களது நம்பிக்கையற்ற நிலைமையை அறிந்து இதனை முதன்மைப்படுத்தி அரசு செயற்பட வேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (க)

# எமது வளத்தை நாமே காக்கவேண்டும் -கா.வே. பாலகுமாரன்



(கொழும்பு)

தமிழீழ மக்கள் ஆயுதப் பயிற்சி பெறுவது என்பது ஒரு தேசக் கடமை, அரசியல் கடமை என்று விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மற்றும் தாயகத்தின் ஏனைய பகுதிகளில் பொதுமக்களுக்கான தற்பாதுகாப்பு பயிற்சிகள் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பயிற்சியைத் தொடக்கி வைத்து சிறப்புரையாற்றும் போதே விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மிகத் தெளிவாக அடுத்து நாம் என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பாக தலைவர் கூறியிருக்கிறார்கள். வீழ்ந்தால் எமது சாவு வீரச்சாவாக இருக்கவேண்டும். களச்சாவாக இருக்க வேண்டும் என்று பொதுமக்கள் அறை கூவல் விடுத்தனர். இன்று நாம் இங்கே கூடியிருப்பதன் பிரதான நோக்கம் எங்களுடைய சாவை நாங்கள் தடுக்க வேண்டும். எங்களுடைய சாவை நாங்கள் தடுக்காமல் யார் தடுப்பது?

எங்களுடைய தேசத்தை, எங்களுடைய உயிரை, எங்களுடைய வாழ்வை, எங்களுடைய வளத்தை நாங்கள் தான் காக்கவேண்டும். உங்களுக்காகவே ஒரு கால கட்டத்திலே ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் படை என்ற கட்டுமாணத்தினுடைய அடிப்படை நாடாக விளங்கும் வியட்நாமிலே அதனுடைய முன்னாள் தலைவர் சியாம் விடுதலைப் போராட்டத்திற்கு அடிப்படை ஆயுதப் போராட்டம். அதற்கு அடிப்படை போராளிகள். அவர்களுக்கு அடிப்படை மக்கள். அன்று அவர்கள் அங்கே நிரந்தரப் படை, குடிப்படை, பிரதேசப் படை, தற்காப்புப் படை என்று பலவிதமான படைகளை மக்களுக்கு ஊடாகக் உருவாக்கிக் காட்டினார்கள்.

ஒரு கட்டத்தில் பொதுமக்களுக்கு போர்க்கலை கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். போர் தொடர்பான அறிவும் ஆயுதங்களைக் கையாளும் ஆற்றலும் இறுதியில் பொதுமக்களிடம் தஞ்சம் புக வேண்டும் என்று கூறினார். அதனால் தான் பத்துலட்சம் படையைக் கொண்ட அமெரிக்காவை தூசியென தூக்கியெறிந்தார்கள்.

இன்று என்றும் இல்லாத அளவுக்கு உலகத்தினுடைய பார்வை எங்கள் மீது இருக்கிறது. கிளிநொச்சி மண்ணிலே நீங்கள் கூடிநின்று கை உயர்த்திக் கூறிய அந்தக் குரல் உலகத்தின் கடைசி குடிமகனின் செவி வரைக் கும் எட்டும்.

ஒரு தேசத்தினுடைய குரலாக ஒலிப்பதற்கு கிளிநொச்சி மண்ணுக்கு ஒரு வாய்ப்பு வாய்த்திருக்கிறது. ஒரு பெரிய அற்புதமான காலம் கனிந்திருக்கிறது. நாங்கள் 97 களில் பயிற்சியை ஆரம்பித்தபோது, கிளிநொச்சி மண் எமது கட்டுப்பாட்டில் இல்லை.

இன்று நாங்கள் இந்த இடத்தில் கூடி எங்களுடைய சாவைத் தடுப்பதற்காக தற்காப்புப் பயிற்சி எடுக்கிறோம். எங்களைக் கொல்ல எந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டனவோ, அதே ஆயுதங்களை நாம் கைகளில் ஏந்தி எங்களைக் காக்கப் போகின்றோம்.

எந்த சாதாரண சிங்கள பொது மகன் பயிற்சி எடுத்து இராணுவமாக மாறி எங்களைக் கொன்றானோ, அதே இராணுவத்தை நாங்கள் எதிர்கொள்ளப் போகிறோம். இன்று நாங்கள் விடுதலைப் போரிலே எழுச்சியும், முதிர்ச்சியும் பெற்று எங்களுடைய சிக்கலை நாங்களே கையாளத் தயாராகிவிட்டோம். அதுதான் இன்றைய கிளிநொச்சி பயிற்சி ஊடாக உலகத்திற்கு நாங்கள் கூறவுள்ள செய்தியாக இருக்கின்றது.

மிகப் பெரிய பலத்தோடு இன்று எழுந்து நிற்கின்றோம். அந்தப் பலத்தினை ஒன்றுபடுத்தி முகிழ்த் தெடுத்து திரட்டிக் கொடுப்பதற்கான சகல ஆயத்தங்களையும் நாங்களே செய்ய வேண்டும். எங்களுக்காக நாங்களே எங்களுடைய போராட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.


இந்த இடத்தில் நாங்கள் இன்று கூடி நிற்பதன் ஊடாக, எங்களுடைய குரலை ஒருமித்து ஒலிப்பதன் ஊடாக ஒரு முடிவை உலகத்திற்கு கூறிக் கொள்கிறோம். அந்த முடிவின் செயற்பாட்டின் அடிப்படையில் எங்களுடைய பெருந்தலைவர் எடுக்கக்கூடிய முடிவினுடைய செயற்பாட்டின் வேகத்தில், எங்களுடைய விடுதலையை வெல்லும் போது இந்த மண்ணிலே நாங்கள் கூடி நின்று மீண்டும் கைகளை உயர்த்தி எங்களுடைய சுதந்திரப் பிரகடனத்தை வாசிப்போம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

உலகத்தினுடைய பேரவலமான ஆழிப்பேரலையின் போதும் கூட, சிறிதும் மனமிரங்காத இந்த சிங்களம் இனி எப்போது இரங்கும் என்பதற்கான வாய்ப்பை எவராலும் தரமுடியுமா என்று கேட்டால் வாய் பொத்தி நிற்கின்ற உருவத்தை நாங்கள் பார்க்கிறோம்.

பொதுமக்களும் இதுபோன்று பயிற்சி எடுக்கும் போது புனிதமான புலிப்படையாக மாறி, தேசத்தினுடைய ஆன்மாவாக மாறி தேசத்தினுடைய எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடிய, அந்த மாபெரும் பொறுப்பு உங்களிடம் வருகிறது. எல்லாச் சிரமங்களையும் பாராது நீங்கள் மன முவந்து முன்வந்து இதனை ஒரு அரசியல் கடமையாக தேசக் கடமையாக புனித பணியாக மேற்கொண்டுவெல்ல வேண்டும் என்பதற்காக உழைக்க வேண்டும் என்றார் (கு)

### தினசரி தியானம்


### விவேகச் சிந்தனைகள்



செயல், சிந்தனை, சொல் ஆகியவற்றில் முழுமையான தூய்மையைக் கடைப்பிடிக்கவேண்டும். இதற்குத் தயாராக இல்லாதவர்கள் ஒரு போதும் உயர் நிலை மெய்ஞ்ஞானம் பெற இயலாது. ஒருவேளை, அவர்கள் மெய்ஞ்ஞானத்தின் சில கீற்றுக்களை கண்டு விட்டாலும் அவர்கள் திரும்பத்திரும்ப கீழே விழுவது நிச்சயம். அதியுயர்ந்த ஆன்மீக வாழ்வோ அல்லது தலைசிறந்த ஆன்மபோதமோ அவர்களுக்கு எட்டாத கனியாகத்தான் இருக்கும்.

# பேச்சு மூலம் தீர்வு இல்லையெனில் யுத்தம் மூலம் தீர்வு காணப்படும்

## திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எச்சரிக்கை



(திருகோணமலை)

அமைதிப்பேச்சுக்களில் எதுவித தீர்வும் ஏற்படாவிட்டால் யுத்தம் மீண்டும் தொடங்கும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் எச்சரித்துள்ளார்.

திருகோணமலை சம்பூரில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தில் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைதிப் பேச்சுக்களில் எதுவித தீர்வும் ஏற்படாவிட்டால் யுத்தம் மீண்டும் தொடங்கும். தீர்வுகள் எதுவும் இல்லாமல் நீண்ட காலத்திற்கு இந்தச் சூழ்நிலையோடு நாங்கள் காத்திருக்கமுடியாது.

இராணுவத்தின் வன்முறைகளினால் ஆத்திரமடைந்த மூன்றாவது சக்தியான மக்கள்தான் இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்துகின்றனர். அரசுதான் முதன் முதலில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலத்தப்பட்ட கருணா குழுவை பயன்படுத்தி அதாவது அந்த மூன்றாவது சக்தியைப் பயன்படுத்தி பொது மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டது. தற்போது இங்கு அமைதியில்லை. எந்நேரத்திலும் யுத்தத்தைத் தொடங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

இராணுவத்தினால் தங்களைப் பாதுகாக்க முடியாத நிலையில் தமிழ் மக்கள் இயல்பாகவே எங்களை ஆதரிக்கின்றனர். ஆழிப் பேரலையின் போது நாம் அவர்களோடு இணைந்து செயற்படுவோம் என்று எண்ணினோம். ஆனால் அவர்கள்அதை நிறுத்தி விட்டார்கள். ஆழிப்பேரலை கூட அவர்களிடத்தில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்றார் எழிலன்.

யுத்தம் தொடங்கினால் விடுதலைப்புலிகளின் இலக்கு யாழ்ப்பாணமாகத்தான் இருக்கும் என்பது தொடர்பாகவும் திருகோணமலையில் தற்கொடைப் படையினர் கடற்படைமீது தாக்குதல்கள் நடத்தப்படக் கூடும் என்பது குறித்தும் கேட்ட போது அவை தொடர்பில் சி.எழிலன் எதுவும் தெரிவிக்கவில்லை. 'பொறுத்திருந்து பாருங்கள்' என எழிலன் மேலும் தெரிவித்தார்.

(ச-4,39)

## தமிழீழ அடையாள அட்டை வழங்கும் பணி ஆரம்பம்

(கிளிநொச்சி)

தமிழீழ ஆட்பதிவுத் திணைக்களம் நாளை முதல் தேசிய ஆள் அடையாள அட்டையினை வழங்கும் பணியை தொடங்குகின்றது.

தேசிய அடையாள அட்டை பெறுவது தொடர்பான விளக்கும் கையேடு நாளை வெளியிடப்படும் என தமிழீழ ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## திருப்பலி

(யாழ்ப்பாணம்)

குருநகர் யோசவ்வாஸ் இளைஞர் மன்றத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருநாள் திருப்பலி இன்று இடம் பெறவுள்ளது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இன்று காலை 5.45 மணிக்கு இத் திருப்பலி நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ச-4)

## சூட்டுக் கொலை...

### மாமாங்கத்தில்...

மட்டக்களப்பு நகருக்கு வெளியே மாமாங்கத்தில் நேற்று மாலை 6.30 மணியளவில் இளைஞர் ஒருவர் சூட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடை ஒன்றிற்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந் தெரியாத நபர்களினால் இவ் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிஷோக்குமார் (வயது-21) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட கொலைக்கான பின்னணியோ கொலையாளியோ இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

### அம்பாறையில்...

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கோமாரியில் பொலிஸ் அதிரடிப் படை முகாமின் அருகில் நேற்று முன்னிரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்கட்டட தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கண்டி உடுதும்பரவைச் சேர்ந்த கீனகெதர சுனில் சந்திரலால்(வயது-45) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் கட்டட மேசன் தொழிலுக்காக அப் பகுதியில் சில மாதங்களாகத் தங்கியிருந்தார் எனத் தெரியவருகின்றது.

அதிரடிப்படை முகாம் மீது இனந்தெரியாத நபர்களினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து இடம் பெற்ற மோதலில் இடையில் அகப்பட்டே இவர் மரணமடைந்துள்ளதாக அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ச-4)

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் வவு. செட்டிகுளத்தில் இருவர் பலி

வவுனியா செட்டிக்குளம் பொலிஸ் பிரதேசத்தில் உள்ள 15 ஆவது பொலிஸ் பிரிவுப் பகுதியில் பொலிஸ்மீது நேற்றுக் காலை 10.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் இருவர் காயமடைந்துள்ளார். இதனையடுத்துப் பொலிஸார் திருப்பிச் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டனர்.

செட்டிகுளத்திற்கும் பறையனாலம் குளத்திற்கும் இடையில் உள்ள பொலிஸ் நிலையம் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அங்கு காவலில் இருந்த இரு பொலிஸார் தமது காவலரணுக்கு முன்னால் நடமாடிய 4 பேரினை சோதனை செய்ய முற்பட்ட வேளை அவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொலிஸாரும் படு காயமடைந்ததாகவும் பொலிஸார் திருப்பிச் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டதாகவும் கொல்லப்பட்டவர்கள் இருவரும் விடுதலைப்புலிகள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டப் பதில் நீதிவான் எம். சிற்றம்பலத்தின் உத்தரவினையடுத்து சடலங்கள் அடையாளம் காணும் பொருட்டும் மருத்துவப் பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காகவும் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச-4)



மன்னார் முருங்கன் பகுதியில் நேற்று தனியார் பஸ் ஒன்றில் இருந்து 17 கிலோ நிறையுடைய வெடி பொருட்கள் மீட்கப்பட்டன.மீட்கப்பட்ட பொருட்களுடன் பொலிஸார்...

### அடம்பன்...

இவர்கள் தப்பிச் செல்லும் போது தம்முடன் கொண்டு வந்துள்ள உடைமைகளை கைவிட்டுச் சென்றதாகவும் அவற்றைப் பரிசீலித்த போது அப்பொதிகளில் இராணுவத்தினருக்கு சொந்தமான பொருட்களும் உணவு வகை களும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இத் தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப்புலிகள் எத் தகவல்களையும் வெளியிடவில்லை. (ச-4)

### வடக்குக்கிழக்கு...

இவரும் தனக்கான நியமனப்பத்திரத் தினை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக் கொண்டார். இவர் நீண்ட காலமாக பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பணியாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய ஆளுநராக பதவியேற்றுள்ள முஹான் ஜெய விக்கிரம நாளை திருகோணமலையில் உள்ள ஆளுநர் பணிமனையில் தனது கடமையினை பொறுப் பேற்கவுள்ளார். (ச-4)

### வடக்குக் கிழக்குப் பிரச்சினை...

வடக்குக்கிழக்கில் கடந்த சில மாதங்களாக தமிழ் மக்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இதன் காரணமாக அங்கே இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்து தமது கோரிக்கைகளை வெளியிட்டுள்ளனர். இதனை ஆய்வு செய்தஜனாதிபதி மகிந்த, நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஊடாக தனது தீர்வுத் திட்டங்கள் குறித்து வெளியிடுவார் என கூறப்பட்டது.

இதேவேளை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் இடம் மற்றும் நாள் பற்றிய விபரம் குறித்து இவ் வாரம் இணக்கப்பாடு உருவாகிவிடும் என்று அரசாங்கத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்னிலங்கை இணக்கப்பாட்டிற்கான அனைத்துக்கட்சி மாநாட்டின்போது எந்த நாட்டிலேயும் பேச்சுக்களை நடத்துமாறு பல்வேறு கட்சிகளும் வலியுறுத்தின.

ஜே.வி.பியும் ஜாதிகஹெலஉறுமய மட்டும் இம்முடிபை எதிர்த்தன. இருப்பினும் இது குறித்து இறுதி முடிபினை மகிந்த ராஜபக்ஷாவே மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-4,39)

### நுணாவிலில்...

வந்த இவர் மீது முகாமிற்கு வெளியே வந்த இனந் தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தினையடுத்து அப்பகுதியால் வந்த பொதுமக்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். வாகனங்களில் சென்றோர் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ச)

### துன்னாலையில்...

நடந்து வந்த சிலரே அவரைச் சுட்டு விட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் அவரது வீட்டில் வாசல் அருகே காணப்பட்டது. (ச-101)

### வன்னிக்கு...

சேர்ந்துள்ளனர். பெருமளவில் இடம் பெயரும் மக்களுக்கான நிவாரண உதவிகளை செய்வதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வெளிநாடுகளில் இருந்தும், வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களிடமும் அவசர நிதியுதவியை வேண்டி நிற்கிறது என அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது. (ச.4)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.